பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 02 திங்கட்கிழமை (17.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 353

# நிலங்களைக் கைப்பற்றுவதன் மூலம் அரசால் வெற்றியடையவே முடியாது!

## உரிய அரசியல் தீர்வை முன்வைப்பதே முக்கியம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவம்பர் 17

"வெறுமனே நிலங்களை கைப்பற்றுவதன் மூலம் யுத்தத்திலோ அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலோ அரசால் வெற்றி அடைவே முடியாது" என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்வதும், அந்த மக்களின் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வை முன்வைப்பதுமே முக்கியமானது என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பூநகரியை படையினர் கைப்பற்றியமைக்காக நாம் படையினருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த செய்தியை அரசியல் மயப்படுத்த அரசு முற்படக்கூடாது.

படையினர் மிகத் திறமையாகப் போராடி பல உயிர்க்ளைத் தியாகம் செய்து இந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றனர். அவர்களை நாம் கௌரவிக்கவேண்டும்.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதே

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் நேற்று விமானத் தாக்குதல்

கொழும்பு, நவ. 17

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் முகமாலைப் பகுதிமீது நேற்று விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்கள்ளை நடத்தின.

முகமாலைப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள்

(16 ஆம் ப்க்கம் பார்க்க)

**கல்விச் சுடரில்**

க.பொ.த.ப(சா) பரீட்சை

உள்ளே: ENGLISH LANGUAGE ஆங்கிலம்

நாளை: வரலாறு

## இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்த புதுடில்லிக்கு விரைந்தார் ரணில்

கொழும்பு, நவ. 17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா சென்று திரும்பியதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும் இந்தியா சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்து கொண்டு விட்டுநேற்றுக்காலை அவர் இந்தியா நோக்கிப் புறப்பாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரம் தெரிவித்தது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி உட்பட பல இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை பற்றி அவர்களுக்கு ரணில் எடுத்துக் கூறுவார் என்று மேலும் தகவல் தந்தது.

குறிப்பாக இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் யுத்தம், யுத்தத்தால் ஏற்படும் தமிழ் மக்களின் இடப்பெயர்வு மற்றும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர் வு தொடர்பான ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு போன்றவற்றை ரணில் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவார் என்று ஐ.தே. கட்சி வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.



இச்சந்திப்புகளை முடித்துக்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்புவார் (அ-சி)

## ஆனையிறவு-பரந்தன் நோக்கி படையினர் முன்நகர முயற்சி

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,நவ.17

பூநகரி பிரதேசத்தைக் கைப்பற்றி அங்கு நிலைகொண்டுள்ள படையினர் தற்போது பரந்தன் மற்றும் ஆனையிறவு பிரதேசங்களை நோக்கியே முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதனால் அப்பிரதேசங்களில் மறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படும் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தற்போது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்-என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக் கார தெரிவித்தார்.

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பரந்தன் மற்றும் ஆனையிறவு பகுதிகளுக்குச் சென்றுள்ளனர் என பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் சொன்னார். (அ-சி)

## கிளிநொச்சி நகர்மீது தொடர் ஷெல் வீச்சு!

வவுனியா, நவ.17

கிளிநொச்சி நகர் மீது கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் படையினர் மேற்கொண்ட தொடர் ஆட்லறி மற்றும் பல்குழல் ரொக்கட் தாக்குதலில் நகரில் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புகள், பொதுக்கட்டடங்கள் என்பன கடும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு 8 மணி தொடக்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 7.50 மணிவரை இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் பொதுக்கட்டடங் கள் உட்பட பொதுமக்களின் பல குடியிருப்புகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநெச்சி நகரில் ஏ- 9 வீதிக்குச் சமீபமாகவுள்ள வைத்தியசாலை மற்றூம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், தொழில்நுட்பக்கல்லூரி ஆகியவற்றுக்கும் இந்தத் தாக்குதலால் சேதம் ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

## புலிகளின் பகுதியில் கிளைமோர் 7 பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

கொழும்பு, நவ. 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, கொல்லர் புளியங்குளம் வீதியில் வைத்து நேற்றுமுன் தினம் நண்பகல் 12.30 மணியளவில் அரச படைகளின் ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று விஜய் ரசிகர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

சென்னை, நவ.17

ஈழத்தமிழர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தும், இலங்கையில் போரை நிறுத்தக் கோரியும் திரைப்பட நடிகர் விஜய் மற்றும் அவரது ரசிகர்களும் சென்னையில் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்னை சேப்பாக்கம் அரசினர் விருந்தினர் மாளிகை எதிரே அமைக்கப்பட்டிருந்த மேடையில் விஜய், தாயார் ஷோபா, தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் மற்றும் தமிழகம் தழு வியரீதியில் வந்தஅவரது 5000 இற்கும் மேற்பட்ட ரசிகர்களுடன் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து யாழ் தேவி மூலம் யாழ். நகர் செல்லும் காலம் வருமாம்

### டலஸ் அழகப் பெரும நம்பிக்கை

கொழும்பு, நவ. 17

கொழும்புக் கோட்டையிலிருந்து யாழ் தேவி மூலம் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் காலம் ஒரு வருடத்திற்குள் உருவாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

- இவ்வாறு போக்குவரத்துத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நாரஹேன்பிட்டியவில் இடம்பெற்றது. அங்கு கலந்துகொண்டு உரையாற்றும்போதே

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பிரதேசத்தில் காவலரண்கள் அமைப்பு

கொழும்பு, நவ. 17

மன்னாரில் பல இடங்களில் இராணுவத்தினர் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக மக்கள் குடியிருப்புக்கள் இன்றி காணப்பட்ட தொடர்சியான 05 வீடுகளை தமது காவலரண்களாக இவர்கள் மாற்றியமைத்துள்ளனர்.

குறிப்பிட்ட 05 வீடுகளிலும் உள்ள மக்கள் அச்சம் காரணமாக

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நிவாரணப் பொருள்கள் நேற்றுக் கொழும்பை வந்தடைந்தன

### செஞ். குழு மூலம் வன்னிக்கு அனுப்ப ஏற்பாடு

கொழும்பு, நவ.17

வட பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியாவில் திரட்டப்பட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய உணவுக் கப்பல் ஒன்று நேற்றுக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்த நிவாரணப் பொருள்கள் இலங்கை அரசின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு

வலி.வடக்கு, நவ.17

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் மாவட்ட விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கிடையே நடத்திய தடகளப் போட்டியில் 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீர, வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷினால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆண்களுக்கான சிறந்த தட வீரராக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ரி.தர்சனும் -

சிறந்த கள வீரராக தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜீ.பிரதீபனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பெண்களுக்கான போட்டிகளில் சிறந்த தட வீராங்கனையாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எம்.மோசாந்தியும் சிறந்த கள வீராங்கனையாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வி.கஜந்தியும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை யாழ். பல்கலைக்கழகமும் 2 ஆம் இடத்தை போஸ்டார் விளையாட்டுக் கழக மும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை யாழ். பல்கலைக்கழகமும் 2 ஆம் இடத்தை பண்டத்தரிப்பு ஐக்கிய வி.கவும் பெற்றுக் கொண்டன. அனைத்துப் போட்டிகளிலும் முதலாம் இடத்தை யாழ். பல்கலைக் கழகமும் 2ஆம் இடத்தை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (1-86)

## கடும் மழையின் போது வீட்டுக் கூரை முறிந்து வீழ்ந்தது

யாழ்ப்பாணம், நவ. 17

இரவு நேரம் பெய்த கடும் மழையின் போது வீட்டின் கூரை முறிந்து வீழ்ந்தது. வீட்டினுள் நித்திரையிலிருந்த ஐந்து பிள்ளைகளும் இரண்டு பெண்களும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் இடம் பெற்றது.

பாதிக்கப்பட்ட இக்குடும்பம் அருகில் உள்ள வீடொன்றில் தஞ்சமடைந்துள்ளது.

## தொண்டுதிய ஆச்சிரம பணிகளுக்கான வெற்றிடங்கள்

1) முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)
   a. கல்வித்தகைமை க.பொ.த. (உ/த) கணனி, கணக்கியல் அறிவுடையவர்
   b. வயதெல்லை 30 வயதுக்கு மேற்பட்டவர்கள்
   c. ஆரோக்கியமானவர்

2) களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper)
   a. கல்வித்தகைமை க.பொ.த (சா/தரம்) கணக்கியல் அறிவுடன்
   b. வயதெல்லை 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்
   c. ஆரோக்கியமானவர்

3) ஆண், பெண், சிறார்கள் மேற்பார்வையாளர்
   a. கல்வித்தகைமை க.பொ.த (சா/தரம்)
   b. வயதெல்லை 45 வயதுக்கு மேற்பட்டவர்கள்
   c. ஆரோக்கியமான ஓய்வூதியம் பெறுவோர் விருப்பத்தக்கது.
   d. நிரந்தரமாகத் தங்கவேண்டும்

4) பாதுகாப்பு உத்தியோகத்தர்
   a. கல்வித்தகைமை க.பொ.த (சா/தரம்)
   b. வயதெல்லை 45 வயதுக்கு மேற்பட்டவர்கள்
   c. மூன்று வருடத்துக்கு மேல் தொழில் அனுபவம்
   d. ஆரோக்கியமானவர்

5) சமையலாளர்
   a. வயதெல்லை 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்
   b. தொழில் அனுபவம்
   c. ஆரோக்கியமானவர்

**மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஒன்றுக்குமேல் விண்ணப்பிப் போர் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து 30.11.2008 ஆம் திகதிக்கு முன்பதாகப் பதிவுத்தபாலில் *தலைவர், ஸ்ரீ பரமானந்தா சிறார் - முதியோர் இல்லம், வதிரி, கரவெட்டி* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தொண்டுதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

மா.யோகீஸ்வரதேவன்
செயலாளர், ஸ்ரீபரமானந்த ஆச்சிரம்
வதிரி, கரவெட்டி.

(A)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கதிர்காமத்தம்பி

(வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைக் கட்டியவரும், ஓய்வுபெற்ற அதிபரும்)

கொத்தங்கலட்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கதிர்காமத்தம்பி நேற்று (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம்- தங்கம், சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற மாதவிப்பிள்ளையின் கணவரும் சிறிபாலம்பிகை, புவனாம்பிகை, பாலகுமாரன் ஆகியோரின் தந்தையும் சிவபாக்கியம், பசுவதி அம்மா ஆகியோரின் சகோதரனும் சிவபாலன், ஜெயந்திரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2008) திங்கட்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், சகோதரி,
மருமக்கள், மருமகன்,
பேரன் (சுரேஸ்குமார்).

*கொத்தங்கலட்டி,*
*வல்வெட்டித்துறை.* (B)

## ஆரிய திராவிட பாஷா சங்க பட்டமளிப்பு விழா புதனன்று

யாழ்ப்பாணம், நவ. 17

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பட்டமளிப்பும், பாராட்டு விழாவும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் உள்ள கீழைத்தேயக் கல்லூரியில் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் முதன்மைவிருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர், சி.சிவலிங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (அ-ரி)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, நவ.17

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பாரதி விளையாட்டுக்கழக (பி) அணியும் மோதவுள்ளன. (1-86)

THE ROYAL COLLEGE OF JAFFNA

*சுலபமான முறையில் மூன்று மாத காலங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில மற்றும் ஆங்கில இலக்கணம் O/L, A/L, B.A. விளாவிடை வகுப்புகள். By ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) k.k.s. வீதி யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.*

### தவறிவிட்டது

முருங்கன்பிட்டி, முருங்கன் என்னும் முகவரியுடைய சந்தியோகு மைக்கல்தாசன் என்பவரின் தே.அ.அட்டையும் (692113691V), கொமர்ஷல் வங்கி A.T.M அட்டையும் 14.11.2008 வெள்ளிக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

S.மைக்கல்தாசன்
98, மவுண்ட் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0602216815,
0777114098.
(C/555352)

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள்
17.11.2008 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

**ராஜீவ்**
*நவாலி வீதி,*
*ஆனைக்கோட்டை.*
(79842)

### ஒத்துமாறல்

யாழ்.மாவட்டத்தில் பொதுமுகாமைத்துவ உதவியாளராக (மத்திய அரசு நியமனம்) கடமையாற்றுபவர் கொழும்பு அல்லது கண்டிக்கு ஒத்துமாற விரும்புகிறார். 0779004171.

இ.ஆகூதாயன்
*ஒடை ஒழுங்கை, புலோலி வடக்கு,*
*பருத்தித்துறை.* (C/555347)

### கண்ணீர் அஞ்சலி



சிரணிச்சந்தி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட

திருமதி
சந்திராதேவி பத்மநாதன்
(இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்)

அவர்கள் 15.11.2008 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய். (79933) குடும்பம்.

## மோட்டார் சைக்கிளில் வந்து பட்டப்பகலில் தாலிக்கொடி பறிப்பு

யாழ்ப்பாணம், நவ.17

தனிமையில் சென்ற பெண்ணின் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்களினால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, மணல்தறை ஒழுங்கையில் இந்தத் துணிகரத் திருட்டு நேற்று நண்பகல் இடம்பெற்றது. பலாலி வீதி பூட்டப்பட்டு இருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அந்தப் பெண்ணிடம் மாற்று வழி கேட்பது போன்று கதைத்துக் கொண்டே தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு வேகமாகத் தப்பிச் சென்றனர்.

தாலிக்கொடி அறுக்கப்பட்டதும் பெண் கூக்குரலிட்டு அயலவர்கள் வந்து தேடிய போதும் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



எங்கள் குலவிளக்காக
விளங்கிய
திருமதி
அழகம்மா தில்லைநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியை, குப்பிழான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்)

***அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று (17.11.2008) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைப்பதுடன், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி, இரங்கல் செய்தி, கண்ணீர் அஞ்சலி, மலர்வலயம் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இன்றைய இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.***

*கண்மணி வீதி,*
*கட்டப்பிராய்,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.போ.021 222 9425*

தி.ரவீந்திரநாதன் (ஆசிரியர்)
(தலைவர், கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்).

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா யோகரத்தினம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா யோகரத்தினம் நேற்று (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகரத்தினம் (முன்னாள் உரிமையாளர், நாதன்ஸ் ரோர்ஸ் - ஓட்டுக்கடை) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2008) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல.87, சதணமாதா கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.87, சந்தணமாதா கோயில் வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
தொ.பே.இல. 021 222 8279

தகவல்:
மு.சிவநாதன்
(சிவம் - பேரன்). (79936)

### வல்லிபுரம் தவம்



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தவம் நேற்று (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் பாஸ்கரன், லோஜினி, ஜானகி, றஜனி, (கனடா), விமலச்சந்திரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, இராசமணி, பவளம், சிவபாக்கியம் மற்றும் சுகிர்தம் ஆகியோரின் சகோதரரும் கனகராசா, நகுலேஸ்வரன், தவராசா, சுகிர்தா, சபீனா ஆகியோரின் அன்பு மாமனும் தர்சினி, திசோக்குமார் (பிரான்ஸ்), சஞ்சுஜா, நிருபினி, பிரணவி, லயிதன், கயிதா, நியிதா, அஜந்தன், ஆரூசன், டானியல், கதரினா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 304, ஆடியபாதம் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (79932)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கொழும்பின் முகமூடி கழன்றுவிழும் காலம் வாராது போகுமா....?

தமிழ்ப் பகுதிகளில் படையினரால் மீட்கப்படும் பிரதேசங்களை நிர்வகிக்கும் அதிகாரம் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீதி அமைச்சர் டிலான் பெரேரா. நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

பூநகரி, படைத்தரப்பின் வசம் வந்துவிட்டதான தகவல் வெளிவந்த கையோடு அவர் இந்தக் கருத்தை முன்வைத்திருக்கிறார்.

நீதி அமைச்சரின் இந்தக் கருத்து அரசாங்க உயர் மட்டத்தின் காதில் ஏறுமா என்பது சந்தேகத்துக்கு உரியது. அதனைவிடவும் இந்த நடைமுறையால் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் அவர்களுக்குக் கிடைத்துவிடும், கைக்கு வந்துசேரும் என்பது அசாத்தியம். நினைத்தும் பார்க்க முடியாத ஒரு விடயம். அதுநிற்க.

படையினரால் மீட்கப்படும் பகுதிகளில் ஜனநாயகம் என்ற போர்வையுடன் எதேச்சாதிகாரமும், அரசாங்கத்தின் கையாள்களின் அட்டூழிய நிர்வாகமும் நடைபெறுவதுதான் இந்த நாட்டின் வழமை.

அதற்குப் புறம்பாக-மேலதிகமாக-பாதுகாப்புக் காரணங்கள் என்ற முத்திரையுடனும் சிவில் நிர்வாகத்துக்கு உதவுதல் என்ற பெயரிலும் இராணுவ நிர்வாகம் நடைபெறுவதையே கண்கூடாகப் பார்க்கிறோம்.

1996இல் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், கடந்த வருடம் விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் இந்த நிலையே தொடர்கிறது. கிழக்கைப் படையினர் மீட்டு, தேர்தல் நடத்தி அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டோம் என்று மஹிந்த அரசு உலகத்துக்குப் பீற்றிக் கொள்கிறது. ஆனால், அங்கு ஜனநாயகம் என்ற பெயர்ப்பலகைக்குப் பின்னால் இராணுவ ஆட்சிதான் நடைபெறுகிறது.

இந்தப் ''பொட்டுக்கேட்டை'' தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெள்ளிக்கிழமை - நீதி அமைச்சர் தமது கருத்தை வெளியிடுவதற்கு முதல் நாள் - அதே நாடாளுமன்றில் அம்பலப்படுத்தி இருந்தார். கிழக்கில் தமிழர்களின் நிலங்கள் எவ்வாறு அபகரிக்கப்படுகின்றன என்பதனை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துக் காட்டினார். தமிழ் மக்களை அகதிமுகாம்களுக்கு அனுப்பிவிட்டு, அவர்களின் காணிகள் அரசாங்கத்தினால்கபளீகரம் செய்யப்படுகின்றன என்பதை அம்பலப்படுத்தினார்.

தமிழ் மக்களை மீட்டெடுப்பதாகக் கூறிக்கொண்டு அரசு - இராணுவம் - தமிழ் மக்களை வீட்டைவிட்டு விரட்டி மரநிழல்களில் வாழ வைத்துவிட்டு அவர்களை அவலமுறவைக்கும் அக்கிரமத்தையும், சர்வாதிகார நடவடிக்கைகளையும் உதாரணம் காண்பித்தார்.

இந்த இலட்சணத்தில், நீதி அமைச்சர் டிலான் பெரேராவின் யோசனை - படையினரால் மீட்கப்படும் பிரதேசங்களை நிர்வகிக்கும் அதிகாரம் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற யோசனை - தமிழர்களின் வாழ்வைச் சீரழிப்பது மட்டுமன்றி அவர்களின் அபிலாசைகளை, பிரதான உரிமைகளை ஒரு போதும் வழங்கமாட்டாது.

இன்னும் 20 வருடங்களின் பின்னர் இப்போது சேவையில் உள்ள இராணுவத்தின் பிள்ளைகள் ஆயுதம் ஏந்தும் நிலையை உருவாக்கக்கூடாது என்றும் நீதி அமைச்சர் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது எப்போது சாத்தியமாகும் அல்லது எவ்வாறு சாத்தியமாகும்?

தமிழ் மக்கள் தங்களுக்குரிய சகல உரிமைகளுடனும் தம்மைத் தாமே ஆளும் பூரண சுயாட்சியைப் பெற்றால் மட்டுமே நீதி அமைச்சர் கூறுவது சாத்தியமாகும்.

தமிழர்களின் உரிமைகளில் சிறு துரும்பைக்கூட வழங்க மனமில்லாத தென்னிலங்கை அரசியல்வாதிகள், டிலானின் விருப்பம் நிறைவேற ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டார்கள்

ஏனெனில், இப்போது தெற்கில் அரசியல்வாதிகளாக இருப்பவர்கள் எல்லோரும் இனவாதம், சிங்களப் பேரினவாதம் என்ற கடலில் குளித்து வந்தவர்களே. அவர்கள் எந்தக் கட்சியை அல்லது எந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று நிறம்பூசிப் பார்க்க வேண்டிய தேவையே இல்லை. அவர்கள் வளர்ந்த அரசியல் சூழல், அவர்களின் பிள்ளைகள் வளர்ந்து வரும் அரசியல் என்பன சந்ததி சந்ததியாக ஒரே பேரினவாதக் குட்டைதான்.

ஆகையால் நீதி அமைச்சரின் நன்நோக்கத்துடன் கூடிய மேற்கண்ட கருத்தும் அடிபட்டுப் போகிறது; போகும் என்பதே நிச்சயம், நிச்சயம்!

சற்று உள்ளுர்ந்து பார்ப்போமாயின் -

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையோ, வாழ்வாதார மேம்பாட்டுக்கான இலக்குகளையோ, அடைவதற்கு வகை செய்யக்கூடிய இணைப்பாட்சி அரசியல் முறையைத்தானும் தொட்டும் பார்க்க விரும்பாத திமிர்த்தனமுள்ள சிங்கள அரசியல்வாதிகள் -

தமிழர்களின் பிரிக்கமுடியாத பிறப்புரிமைகளை வழங்குவர் என்று எவ்விதம் எதிர்பார்ப்பது? தட்டிக்கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம் நடத்துவார் என்பது வெறும் வாசகம் அல்ல.

கொழும்பு அரசுகள் அந்த வகை சார்ந்தவையே. நாட்டின் அரசாங்கம் என்ற ஜனநாயகப் பட்டையத்தைக் கையில் கட்டிக்கொண்டு, இறையாண்மை என்ற கடுக்கனையும் பூட்டிக்கொண்டு தமிழர்களின் உரிமைப் போராட்டம் குரோதமானது, ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று நம்பவைத்து வருகிறது. இந்தக் கைங்கரியம் கடந்த பல தசாப்தங்களாகத் தொடர்கதையாகவே நீளுகிறது.

தமிழர்கள் தமக்குரிய உரிமைகளைக் கேட்பது நியாயமானது ஜனநாயகத்துக்கு உட்பட்டது என்பதனை மறைத்து, பிரசாரப் பீடிகையினால் கீழே போட்டு ஒளித்து வைப்பது கொழும்பு அரசுகளுக்குக் கைவந்த கலை. அதுவே பேரினவாதத்தின் சித்து விளையாட்டு!

இந்தச் சித்து வாண்மை மாறும்வரை, மாற்றப்படும் வரை இன்றைய நிலையே, சிக்கலே தொடரப்போகின்றது என்று சாமான்யனும் இலகுவில் கிரகித்துக்கொள்கிறான்.

கொழும்பு அரசுகளின் முகமூடி ஒரு காலத்தில் கழன்று விழும். சர்வதேசம் உண்மையைப் புரிந்துகொள்ளும். அது குறுகிய காலத்திலா, நீண்ட காலத்தின் பின்னரா என்பதை நியதியே முடிவு செய்யும்.

# என்ன விலை கொடுத்தும் புலிகள் கிளிநொச்சியை தற்காத்துக் கொள்ளத் தயாராகி வருகிறார்கள்

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 16.11.2008 அன்று அப்பத்திரிகையில் எழுதியுள்ள களநிலை ஆய்வில் ஒரு பகுதி இது**

புலிகள் பல முனைகளில் கடும் இராணுவ அழுத்தங்களுக்குள்ளாகி வருகிறார்கள் என்று தெரியவந்துள்ளது. இதன் மிகப் பிந்திய தாக்கம் நேற்று முன்தினம் ஏற்பட்டது.

தாங்கிகள், ஹெலிகொப்டர்களின் அனுசரணையுடன் படையணிகள் புலிகளின் பாதுகாப்பு அரண்களை ஊடறுத்துக் கொண்டு அன்று காலை விடிவதற்கு முன்னர் தெற்கு நோக்கிய திசையில் நகரத் தொடங்கினர்கள். அப்பொழுது மூடப்பட்டுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பலத்த மோதல் ஆரம்பமாயிற்று. இரு தரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. புலிகள் விஷ வாயுக்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று இராணுவம் அறிவித்துள்ளது. இந்த வாயுக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உயிர் அச்சுறுத்தல் அற்றவை என்று கருதப்படுகிறது. அதேசமயம் இந்த வாயுக்கள் இனங்காணப்படாத ஒரு வகை இரசாயனப் பொருளாக இருக்கலாம் என்று உயர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் இலங்கையின் பெருநிலப்பகுதியையும் இணைக்கும் குறுகலான பூசந்தியில் முகமாலை அமைந்துள்ளது. வன்னிக்கும் குடாநாட்டுக்குமிடையிலான கேட்வாயிலாகவும் இது கருதப்படுகின்றது. யாழ்ப்பாண ஏரியின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்கில் இந்து சமுத்திரத்தின் கரைவரைக்கும் இப்பகுதியில் அரச படைகளின் பாதுகாப்பு அரண்கள் அமைந்துள்ளன. முகமாலைக்குத் தெற்கே புலிகளின் மிகப் பலமான அரண்களை



உடைப்பதற்கு இலங்கை இராணுவம் ஒரே வருடத்தில் முயற்சியெடுத்திருப்பது இதுவே முதல் தடவை. கடந்த வருடம் நவம்பரில் இப்படியான ஒரு முயற்சி இடம் பெற்றது. கடும் எதிர்ப்பின் காரணமாகப் படையினர் தமது நிலைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

படைகளின் எந்த முயற்சியையும் முறியடிக்க முடியாமல் போகும் நிலையேற்பட்டால் அதிக நிலப்பரப்பைப் புலிகள் கைவிட நேரலாம். அத்துடன் தர்ம சங்கடமான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேரலாம். புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் தின உரையை நிகழ்த்துவதற்கு 10 நாள்கள் இருக்கும் நிலையில் பூநகரியின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. புலிகளின் வானொலி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதில் இத் தோல்வி அவர்களுக்குப் பலத்த அவமானத்தை ஏற்படுத்துவதாக இருந்துள்ளது என்று தெரியவந்துள்ளது என உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார், அவர்களில் ஒரு குழுவினர் மற்றொரு குழுவின் மீது பழியைப் போட்டுக் கொள்கிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை தமது 54ஆவது பிறந்த நாளுக்கு அடுத்தநாளில் 19 ஆவது தடவையாக பிரபாகரன் தனது மாவீரர் தின உரையை நிகழ்த்தவிருக்கிறார். இந்த வருடம் தாங்கள் மேற்கொண்ட சாதனைகளையும் அடுத்த வருடத்துக்கான திட்டங்களையும் அவர் வெளியிடுவார். நேற்றுப் படையினர் ஆரம்பித்துள்ள நடவடிக்கை வெற்றியளிக்குமானால் அவர்களை பளையில் கொண்டுபோய் விடும் கிளிநொச்சி நோக்கிய அவர்களின் படையெடுப்பு சோரன்பற்று, ஆனையிறவு மற்றும் பரந்தனைக் கடந்து சென்றாக வேண்டும்.

புலிகளின் கடும் எதிர்ப்பு இந்த முக்கிய நகர் கைப்பற்றப்படுவதைத் தடுத்து வைத்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக அரச தரப்பில் இந்த நகர் கைப்பற்றப்படுவது தொடர்பாகப்

## பூநகரியின் வீழ்ச்சி அவர்களுக்கு பெரும் தாக்கமாக அமைந்துள்ளது

பல்வேறு கால கட்டங்கள் அறிவிக்கப்பட்டதுண்டு. முதலில் இன்னும் சில மீற்றர் தொலைவே இருக்கிறது என்று கூறினார்கள். பின்னர் இன்னும் ஒரு நூறு மீற்றர் தூரம்தான் செல்ல வேண்டியிருக்கிறது என்றார்கள். இந்தக் கட்டத்தில் போர்க்களத்தில் வேறு முனைகள் பக்கம் கவனம் திருப்பப் பட்டுவிட்டது. அதே சமயம் இப்பகுதியில் கிளிநொச்சி நோக்கிய படையினரின் நகர்வைத் தடுக்கும் வகையில் புலிகள் தமது எதிர்ப்புஅரண்களை மேலும் இறுக்கமாகக் கட்டமைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள்.

அக்கராயன் மற்றும் முகமாலை, கனகபுரம் போன்ற கிராமங்களுக்கு அப்பால் புலிகள் கண்ணிவெடிகளை புதைத்து வருகிறார்கள் என்று மன்னாரிலுள்ள இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தது. இராணுவம் நகரக் கூடிய பகுதிகளிலும் திறந்த நிலப் பகுதிகளிலும் மோட்டார் மற்றும் பீரங்கி நிலைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் கூறப் பட்டது. குழிகள் மற்றும் மண் அணைகளைக் கட்டுவதற்குப் புல்டோசர்கள் பயன்படுத்தப்படுகின்றனவாம். எந்த விலை கொடுத்தும் கிளிநொச்சியின் வீழ்ச்சியைத் தடுப்பது அவர்களின் நோக்கமாகும். இதற்காகத் தமது எல்லாவித வளங்களையும் பயன்படுத்துகிறார்கள். ஏனைய பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட போராளிகளும் இங்கு பயன் படுத்தப்படுகின்றனர் என்கிறார்கள் இரா ணுவத் தரப்பினர். கிளிநொச்சி நகரம் புலிகள் தரப்பினருக்கு எந்த அளவு முக்கியத்துவமானதாகவுள்ளது என்பதை இத் தகவல்கள் காட்டுகின்றன.

அதன் வீழ்ச்சியானது புலிகளின் நிலப்பிரதேச ஆக்கிரமிப்புக்கு முற்றுப் முள்ளியாகவிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கிளிநொச்சியைப் படைகள் சென்றடைவார்களானால் அடுத்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் கெரில்லா நிலைகள் ஆட்டிலறி வீச்சு வட்டத்துக்குள் வந்துவிடும். கிளிநொச்சியைத் தற்காப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவர்களான தீபன் மற்றும் பானு ஆகியவர்கள் ஒழுங்கான முறையில் தமது தலைவர் பிரபாகரனைச் சந்தித்து பிரதேசத்தைத் தற்காப்பதற்கு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இராணுவத்தின் அதிரடிப்படையின் மூலமே கடந்த வாரம் முக்கிய சில வெற்றிகள் கிடைத்துள்ளன. மேற்குக் கரையோரப் பகுதியில் கால்நடையாக நகரும் இவர்கள் நிறைய நிலப்பகுதிகளைக் கைப்பற்றியுள்ளார்கள். கிராஞ்சி, வலைப்பாடு, பேய்முனை, பாலாவி போன்ற இடங்கள் இவர்களின் கட்டுப்பாட்டுக் குள் வந்துள்ளன.

**கிளிநொச்சிக்கு இன்னும் 11 கி.மீற்றர் உள்ளது**

பூநகரி - கிளிநொச்சி வீதியில் அமைந்துள்ள நல்லூரைக் கடந்து இராணுவம் பூநகரியை நேற்று முன்தினம் கைப்பற்றியது. இந்த வீதியினூடாகக் கிளிநொச்சிக்கு 11 கி.மீற்றரே உள்ளது. வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கடும் மோதலுக்குப் பிறகு இது சாத்தியமாயிற்று. இந்நகரைப் பலப்படுத்துவதற்காகப் புலிகள் கடற்புலிகளையும் பயிற்றப்பட்ட சிவிலியன்களையும் பயன்படுத்திருந்தார்கள். கடந்த வாரம்தான் வெலிஓயாப் பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த கேணல் சொர்ணத்திடம் பூநகரியைத் தற்காத்துக் கொள்வதற்காகப் பொறுப்பளித்திருந்தார் பிரபாகரன். முதல் தடவையாக யாழ் செல்லும் படை என்ற படை அணியை அவர்கள் பயன்படுத்தி இருந்தார்கள். யாழ்ப்பாணத்தை நோக்கிய நகர்வுக்கெனப் புலிகள் தனிபடைகளை உருவாக்கியுள்ளார்கள் என்பதை இப்பெயர் காட்டுவதாய் உள்ளது. என்றாலும்,

பூநகரியிலிருந்த எல்லாவித இராணுவ சாதனங்களையும் புலிகள் கிளிநொச்சிக்கு அப்புறப்படுத்தியுள்ளனர். இதே வேளை அரச படைகளின் தாக்குதல் காரணமாகப் போராளி அணிகள் சில தம் நிலைகளைக் கைவிட்டுப் போயிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

பூநகரி கைப்பற்றப்பட்ட செய்தி தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெறுவதற்குச் சற்று முன்னதாக இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவால் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன் பதாக ஜனாதிபதியும் இராணுவத்தளபதியும் தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவிப்புகளில் கலந்து கொண்டார்கள்.

பூநகரி வீழ்ச்சியானது யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்புப் படைத்தலைமை நிலையங்கள் மீது ஆட்டிலறித் தாக்குதல்களைப் புலிகள் இப்பகுதியில் இருந்து நடத்துவதைத் தடை செய்வதாய் இருக்கும். கடந்த காலங்களில் அப்படியான தாக்குதல்கள் பலாலியில் விமானங்கள் இறங்குவதையும் பாதித்திருந்தன. படையினர் கிழக்கு முகமாக பூநகரி - கிளி நொச்சி வீதியில் நகர்வதற்கும் இது உதவியாக இருக்கும்.

**புதிய சாத்தியக்கூறு**

பூநகரி வீழ்ச்சியானது கண்டி - யாழ்ப்பாணம் ஏ-9 வீதியின் மேற்குப்புறமாக முழுவன்னிப் பகுதியையும் படைகள் கைப்பற்றும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. மேற்குக்கடல் கரையோரம் முற்றாக அவர்கள் கையில் வந்துள்ள நிலையில் மன்னார்க் குடாவையோ, பாக்குநீரிணையின் சில பகுதிகளையோ தமிழ் நாட்டிலிருந்து இராணுவ சாதனங்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்த முடியாதபடி செய்து விட்டார்கள்.

இன்றுள்ள நிலையில் விஸ்தீரணமான நிலப்பரப்புக்களைத் தற்காத்துக் கொள்வதற்கான புலிப் போராளிகளின் எண்ணிக்கை போதாமல் இருக்கிறது. அதே வேளை பாதுகாப்புப் படைகளின் மரபுமுறையிலான தளபாட பலத்தை எதிர் கொள்வதும் கடினம். வன்னியில் எரி பொருள் பற்றாக்குறை அவர்களைப் பெரிய அளவில் பாதித்துள்ளது. வரும் காலத்தில் கடத்தி வருவது சாத்தியமில்லாமையால் நிலைமை இன்னும் மோசமாக லாம். சில இடங்களில் இரண்டாந்தர நிலைகளில் போரில் அனுசரணையாக இருப்பதற்குக் காயமுற்ற போராளிகளும் பயன்படுத்தப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

படையணிகளின் தளபதிகளும் சிப்பாய்களும் தம் உயிர்களையும் கை, கால் மற்றும் உறுப்புகளையும் இழந்துள்ளார்கள். ஏனையவர்கள் தமக்கு முன்னால் உள்ள கடமைகளைச் செய்து முடிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

எதுவானாலும் விடுதலைப் புலிகளைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அவர்கள் பெரும் அளவு நிலப்பரப்பை இழந்து விட்டார்கள். இவைகளில் அதிகமானவை போர் நிறுத்த காலத்தில் எதிர்ப்பின்றிக் கைப்பற்றப்பட்டவை. ஆனால் அவர்கள் தமது இராணுவத் தகுதியை முழுமையாக இழந்து விடவில்லை. அவர்களின் கடும் அர்ப்பணிப்புப் படை அணிகள் கிளிநொச்சியைத் தற்காத்து நிற்கிறார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 3 | 18.11.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | மு.இ.11.25 வரை |
| நட்சத்திரம்: | பூசம் |
| | பி.இ.03.06 வரை |
| சுபநேரம்: | 10.39 - 12.09 |
| ராகுகாலம்: | 03.09 - 04.39 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச செலாவணி நிதியத்தில் மாற்றம் ஏற்படுத்துவது அவசியம்

## வாஷிங்டனில் இந்தியப் பிரதமர் அறிவுறுத்து



வாஷிங்டன், நவ.17

சர்வதேச செலாவணி நிதியத்தின் (ஐ.எம்.எப்.) ஆளுமைக் குழுவை மாற்றியமைக்க வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் தொடங்கிய ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்றுக்கொண்ட அவர் சனிக்கிழமை உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் அனைத்து நிலைகளிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், நிதி நிறுவன அமைப்புகள் பெரும் திண்டாட்டத்தில் உள்ளன. அதேபோல, சர்வதேச அளவில் பங்குச் சந்தைகளும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளன.

இத்தகைய பொருளாதார நெருக்கடி நிலை பழைய நிலைக்குத் திரும்ப சில காலங்கள் ஆகும். எனினும், இதன் காரணமாக வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் மெதுவான சரிவு ஏற்படத் தொடங்கும்.

ஆனால், இந்தியாவின் நிலையோ மற்ற நாடுகளின் நிலைக்கு எதிர்மாறாக உள்ளது. இந்த நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சியும் மெதுவாகக் குறையும். அதாவது 7 இலிருந்து 6.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கிகளின் நிர்வாகம் மற்றும் அதன் தொடர்புடைய துறைகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு தனது செயல்பாட்டை இழந்தமையும் வங்கிப் பணிகள் குறித்து வெளிப்படையான தன்மை இல்லாததுமே இத்தகைய நிதி நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்.

இதனால், வங்கிகளின் நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகளை மிகவும் எச்சரிக்கையாக கையாளும் வகையிலான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

அத்துடன் சர்வதேச செலாவணி நிதியத்தின் நடைமுறைகளை முழுவதுமாக மறுஆய்வுக்கு உட்படுத்துவதோடு நிதியத்தின் ஆளுமைக்குழுவையும் உடனடியாக மாற்றியமைக்கவேண்டும் என்றார்.

# 'ஜி-20' மாநாடு குறித்து புஷ் மகிழ்ச்சி தெரிவிப்பு

வாஷிங்டன், நவ.17

ஜி-20 நாடுகளின் தலைவர்கள் நடத்திய மாநாட்டில் காணப்பட்ட முன்னேற்றம் தமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது என அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.'

கட்டுப்பாடற்ற வர்த்தகம், சந்தைப்படுத்துதல் போன்ற கொள்கைகள் பேச்சுகளின்போது மதிக்கப்பட்டமை மகிழ்ச்சி ஏற்படுத்தியதெனவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு உலகத் தலைவர்கள் இணங்கவிருக்கின்றனர் என ஜேர்மனியின் சான்சிலர் ஏஞ்சலா மெர்கேல் தெரிவித்தார். இந்தப் பல்வேறு நடவடிக்கை என்பது எண்ணெய் உற்பத்தி செய்யும் செல்வந்த ஆசிய நாடுகள் சர்வதேச நிதியத்துக்கு நிதிவழங்குவதன் மூலம் நிதியம், நிதி நெருக்கடியில் சிக்கும் நாடுகளுக்கு அவசர கடனுதவிகளை வழங்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யூரோவைப் பயன்படுத்தும் நாடுகளுக்குப் பின்னடைவு!

ஜேர்மனி, நவ.17


யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் நாடுகள், வரலாற்றில் முதல்தடவையாக பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே ஐரோப்பிய நாணயத்தைப் பயன்படுத்தும் 15 நாடுகளைக் கொண்ட இந்தக் குழுவின் பொருளாதாரம் கடந்த இரு காலாண்டுகளில் பின்னடைவை எதிர்கொண்டுள்ளன என அதிகாரபூர்வத் தரவுகள் கூறுகின்றன.

யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் நாடுகளில் மிகவும் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடான ஜேர்மனியின் பொருளாதாரம் பின்னடைவை சந்திப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகின் மிகப் பெரிய ஏற்றுமதியாளரான ஜேர்மனியின் பொருளாதாரம் சர்வதேச வணிகத்தில் ஏற்பட்ட தாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

# சிறுநீரைக் குடிநீராக மாற்றும் இயந்திரத்தோடு 'என்டவர்' வெற்றிகரமாக விண்ணுக்குப் பயணம்



நியூயோர்க், நவ. 17

அமெரிக்காவின் 'என்டவர்' விண்கலம் ஏழு பேரைச் சுமந்துகொண்டு நேற்று, விண்ணுக்குச் சென்றது. படுக்கை அறை, கழிவறை, சிறுநீரைக் குடிநீராக மாற்றும் இயந்திரம் ஆகியவற்றையும் இந்த விண்கலம் விண்ணுக்கு எடுத்துச் சென்றுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா உட்பட 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தைக் கடந்த 10 ஆண்டுகளாக அமைத்து வருகின்றன. இதற்காக நாலரை லட்சம் கோடி ரூபா செலவிடப்பட்டள்ளது. சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் விண்வெளி வீரர்கள் தங்கி, ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான தண்ணீர், பிராணவாயு, உணவு போன்றவற்றை மூன்று மாதத்துக்கு ஒரு முறை விண்கலங்கள் கொண்டுசெல்கின்றன. விண்வெளியில் தங்கியுள்ள வீரர்கள் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டு விண்கலத்தில் பூமிக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து 'என்டவர்' விண்கலம், ஒரு விண்வெளி வீராங்கனை உட்பட ஏழு பேரைச் சுமந்துகொண்டு வெற்றிகரமாக விண்ணில் பறந்தது. இந்த விண்கலம் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை நேற்றுச் சென்றடைந்தது.

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் போதுமான வசதியில்லாததால் இரண்டு படுக்கை அறைகளும், இரண்டு கழிப்பறைகளும் புதுதாக அமைக்கப்படவுள்ளன. அது மட்டுமல்லாது அடிக்கடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதால், சிறுநீரைக் குடிநீராக மாற்றும் இயந்திரமும் தற்போது இந்த விண்கலத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விண்வெளிக்குச் சென்றுள்ள விண்வெளி வீரர்கள் இரண்டு படுக்கை அறை மற்றும் கழிப்பறை அமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர், விண்வெளியில் நடந்து விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் சூரிய ஒளித் தகடுகளைச் சரிசெய்யும் பணியிலும் ஈடுபடுவர். இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கபடவுள்ள தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒரு நாளைக்கு 23 லீற்றர் குடிநீரைத் தயாரிக்கும். விண்ணில் உள்ள ஈரப்பதன், சிறுநீர் மற்றும் கழிவு நீரைக் குடிநீராக மாற்றும்.

"சிறுநீரில் உள்ள மாசுக்கள் அகற்றப்பட்டு, வடிக்கப்பட்டு, பிராணவாயு செறிவூட்டப்பட்டு, அயடீன் சேர்க்கப்பட்டு இன்னும் பல பதப்படுத்தல்கள் நடந்த பின் குடிநீராக மாறுவதால், இந்த நீரைக் குடிக்க விண்வெளி வீரர்கள் தயங்குவதில்லை'' - என்று விண்வெளிக் குழுவின் தலைவர் ரோன் ஸ்பென்சன் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானுக்குக் கடனுதவி

கராச்சி, நவ.17

பாகிஸ்தானின் கடன் நெருக்கடியைத் தீர்க்க சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து குறைந்தது 760கோடி டொலர்களைக் ,கடனாகப் பெறமுடிவுசெய்திருப்பதாக பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

இந்தக் கடனின் முதல்பகுதி இம்மாத முடிவுக்குள் பாகிஸ்தானை வந்தடையும் எனத் தாம் எதிர்பார்க்கின்றனர் என பாகிஸ்தானின் பொருளாதார நிபுணர் ஷவுகத் தாஃபின் தெரிவித்துள்ளார்.

முன்னைய கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்புகளில் இருந்து பாகிஸ்தான் அரசு தவறிவிடுமோ என்று நிலவிய நிச்சயமற்ற தன்மையை இந்தக் கடனுதவி நீக்கிவிடும் என்றும் அவர் தெரிவித்தார். (வ)

உலக அரங்கில்

# ஏலத்திற்கு வருகிறது ஜேம்ஸ்பொண்ட் கார்



லண்டன் நவ.17

ஜேம்ஸ்பொண்ட் படத்தில் பயன்படுத்தப்பட்ட கார் டிசம்பர் முதலாம் திகதி ஏலத்துக்கு வருகின்றது.

'ஜேம்ஸ் பொண்ட்' படங்களில் இதுவரை சந்தையில் வெளிவராத பொருள்களையே தேடித் தேடி பயன்படுத்துவார்கள். அந்தவகையில் 'தி ஸ்பை ஹு லவ்டு மீ' படம் எடுக்கப்பட்ட போது, 'லோட்டஸ்' என்ற கார் நிறுவனத் தால் புதிதாகத் தயாரிக்கப்பட்டு வந்த 'லோட் டஸ் இ ஸ்பிரிட்' காரை முன்கூட்டியே பதிவு செய்து அதனைப் பயன்படுத்தினர்.

இந்தப் படத்தில் மொத்தம் 2 லோட்டஸ் இ ஸ்பிரிட் கார்கள் பயன்படுத்தப்பட்டன. ஸ்போர்ட்ஸ் ரக காரான இதை, நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடியதாக படத்தில் காட்டியிருந்தனர்.

படத்தில் ஜேம்ஸ்பொண்டாக நடித்த ரோஜர் மூர் எதிரிகளின் கார்களையும் நீரில் மறைந்து ஹெலிகொப்டரையும் ராக்கெட் குண்டுகளை வீசிப் பந்தாடுவார்.

1976இல் தயாரிக்கப்பட்ட இந்த வெள்ளை நிறக் கார் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அந்தப் படம் வெளிவந்து 31 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்தக் கார் ஏலத்திற்கு வருகிறது.

வரும் டிசம்பர் முதலாம் திகதி லண்டனில் உள்ள பான்ஹாம்ஸ் நிறுவனத்தில் ஏலம் நடக்கிறது. இது 86 இலட்சத்துக்கு ஏலம் போகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல், 'கோல்டுபிங்கர்' படத்தில் ஜேம்ஸ்பொண்டாக நடித்த சீன் கானரி பயன்படுத்திய காரின் பதிவு எண் இரும்புப் பிளேட்டும் அதேநாளில் விற்பனைக்கு வருகிறது. இந்தக் கார் பதிவு எண் பிளேட் மட்டும் ரூ. 57 லட்சத்துக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உயர் நீதிமன்றில் ஆஜராக நவாஸ் ஷெரீப் மறுப்பு



இஸ்லாமாபாத், நவ. 17

தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி குறித்துத் தொடரப்பட்டுள்ள வழக்கில், உயர் நீதிமன்றத்தில் ஆஜராகப் போவதில்லை என்று, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப் கூறியுள்ளார். தற்போதைய நீதித்துறையைத் தான் அங்கீகரிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தேர்தலில் நவாஸ்ஷெரீப் போட்டியிட்டபோது, நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர் என்ற அடிப்படையில், அவர் போட்டியிடத் தடைவிதிக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் [illegible] உள்ளது. இவ்வழக்கில் [illegible] 20ஆம் திகதி ஆஜராக, நவாஸ் ஷெரீப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், நீதிமன்றத்துக்கு ஆஜராகப் போவதில்லை என்றும், தற்போதைய நீதித்துறையைத் தான் அங்கீகரிக்கவில்லை என்றும் ஷெரீப் கூறியுள்ளார். இது குறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்துவதாக எனக்கு அளித்த வாக்குறுதியை அதிபர் சர்தாரி மதிக்கவில்லை. பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டால், பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளில் 99 சதவீதம் தீர்க்கப்பட்டுவிடும். பதவிநீக்கம் செய்யப்பட்ட தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி மீண்டும் பதவியில் அமர்த்தப்படும் வரை எங்கள் போராட்டம் தொடரும். சர்வதேச நிதியத்திடம் பாகிஸ்தான் நிதி கோராமல் இருப்பதே நல்லது. சமீப காலமாக, சர்வதேசம் அளித்துவரும் நிதி உதவி, ஊக்குவிப்பதாக இல்லை. நிதி நெருக்கடியில் இருந்து பாகிஸ்தானை விடுவிக்கவேண்டுமானால், இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவேண்டும் - இவ்வாறு ஷெரீப் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதிக்கொள்ளும் முக்கிய காட்சிகளை படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## வலிகாமம் வலய உதைபந்தாட்டம்

# ஏழாலை ஸ்ரீ முருகனை வீழ்த்தி சம்பியனானது மானிப்பாய் இந்து

வலி.வடக்கு,நவ.17

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வலயமட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும், மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளின் ஆதரவாளர்களும் மிகவும் உற்சாகத்துடனும் ஆக்ரோஷத்துடனும் காணப்பட்டனர்.

இதற்கு ஏற்ப இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் மோதிக்கொண்டனர். இதனால் முதல் பாதி ஆட்டம் கோல்கள் எதையும் பெறாத நிலையில் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் இரு அணி வீரர்களும் இன்னும் ஆக்ரோஷத்துடன் விளையாடினார்கள். இதனால் இரு அணிகளிலும் சில வீரர்கள் மஞ்சள் அட்டை காட்டி, மத்தியஸ்தர்களினால் எச்சரிக்கப்பட்டார்கள்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னணி வீரர் கனிஸ்டன் பந்தை கோல் கம்பத்தின் மையப் பகுதிக்கு தூக்கி அடிக்க, அதனை மிகவும் லாவகமாக அந்த அணியின் இன்னொரு முன்னணி வீரர் மதிராஜ் தலையால் மோதி கோல் கம்பத்தில் செலுத்தி கோலைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்தும் இரு அணியினரும் சற்று மூர்க்கத்தனமாகவும் மிகவும் வேகமாகவும் விளையாடினார்கள். இந்நிலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னணி வீரர் ஒருவர், பந்தை எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கி கொண்டுசென்ற வேளையில், ஸ்ரீ முருகன் கோல் காப்பாளர் தனது எல்லையுள் வைத்து எதிரணி வீரரை நோக்கி காலால் உதைக்க எத்தனிக்கவே, மத்தியஸ்தர் தண்டனை உதையொன்றை வழங்கினார்.

இதனை மானிப்பாய் இந்துக் கல்லூரி உரிய முறையில் பயன்படுத்தி மேலும் ஒரு கோலைப் பெற்று தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது. ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2 : 00 என்ற கோல் கணக்கில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தை வென்று வலய சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாததால்

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதனை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உரிய முறையில் பயன்படுத்தி 4:1 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்று 3 ஆம் இடத்தைத் தட்டிக் கொண்டது. (1-86)




# 13 வயது ஆட்டங்களின் போது.....

## உடுப்பிட்டியை வென்றது ஸ்கந்தா

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் செலான் வங்கி ஆதரவுடன் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டமொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 27 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பிரணவன் 36, நிலக்ஷன் 9 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார் கள். துவாரகன் 05 விக்கெட்டுக்களையும், விதுசன் 04 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 38 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. துவாரகன் 29, நிதர்சன் 22, ஜனக்சன் 13 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

சஞ்சீவன் 5 விக்கெட்டுக்களையும், நிரோஜன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத் தாடிய அமெரிக்கன் மிஷன் கல்லூரி 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நிலக்ஷன் 19, ஆனந்தகுமார் 9 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள். ஜனக்சன் 4 விக்கெட்டுக்களையும், விதுசன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் 3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 16 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கியது.

நிதர்சன், விதுசன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 8, 3 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

## சென்.ஜோன்ஸை வென்றது கொக்குவில் இந்து: லிங்கநாதன் 9 விக்கெட்டுக்களை சாய்த்தார்!



லிங்கநாதன்

வலி.வடக்கு, நவ.17

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் செலான் வங்கி ஆதரவுடன் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 36.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கிரிசாந் 37, பார்த்தீபன் 22, கீர்த்திகன் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 39 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் மிசாக் 11 ஓவர்கள் பந்து வீசி, 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 36 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், சுவிந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கிரிசாந் 6.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 30.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக கெவின்கோசின் 8 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் லிங்கநாதன் 9.1 ஓவர்கள் பந்து வீசி, 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், மயூரதாசன் 5 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனால் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும் நிலைக்குத் தள்ளப்பட்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 45 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. கொராட் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் லிங்கநாதன் 16 ஓவர்கள் பந்து வீசி, 13 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 14 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் பந்து வீசிய லிங்கநாதன் இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

(1-86)

# விவசாயக் குடும்பத்தில் பிறந்தபோதும் விடாமுயற்சியால் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்துவரும் பார்த்தீபன்

*பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப்போட்டியில், தட்டெறிதல் நிகழ்வில் இரண்டாமிடத்தைச் சுவீகரித்து, யாழ்.மாவட்டத்தின் பதக்க எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவரான மகாராஜா பார்த்தீபன். விவசாயக் குடும்பத்தில் பிறந்தபோதும், விளையாட்டுத்துறையில் சாதனைபடைத்த அவரை உதயன் வாசகர்களுக்காகச் செவ்வி கண்டோம்.*

**கே:** நீங்கள் எத்தனை வயதில் இருந்து விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு வருகிறீர்கள்?

**ப:** நான் 13 வயதில் இருந்தே விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு வருகின்றேன். ஆரம்பத்தில் ஓட்டப்போட்டியிலேயே கவனம் செலுத்தியபோதும் எமது உடற்கல்வி ஆசிரியரான மயிதவாகனம் அவர்கள் தான் தட்டெறிதலில் என்னை ஈடுபடுமாறு வழிப்படுத்தினார்.

**கே:** தேசியமட்டப் போட்டிகளில் இந்த ஆண்டு 2ஆம் இடம்பெறுவதற்கு முன்னர் எந்தெந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறீர்கள்?

**ப:** 2005இல் இருந்து தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் வலிகாமம் வலயத்தில் ஈட்டி எறிதல், தட்டெறிதல், சட்டவேலிப் பாய்ச்சல் ஆகிய மூன்று போட்டிகளிலும் முதலிடம் பெற்றுச் சம்பியனாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறேன். 2005இல் தட்டெறிதலில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளேன். 2007இல் இம்மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனாகியுமுள்ளேன். இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சை காரணமாகப் போதிய பயிற்சியின்றிப் போட்டிகளில் பங்குபற்றியதால் மாகாணமட்டத்தில் ஈட்டி எறிதல், தட்டெறிதல் ஆகிய இரு போட்டிகளிலும் இரண்டாம் இடம்தான் பெறமுடிந்தது. எனினும் பின்னர் நான் மேற்கொண்ட கடும் பயிற்சிகளின் விளைவால் தேசியமட்டத்தில் தட்டெறிதலில் இரண்டாம் இடத்தைப் பெறமுடிந்தது.

**கே:** உங்களுக்குப் பாடசாலையில் எத்தகைய பயிற்சிகள் தரப்பட்டன?

**ப:** வழமையான பயிற்சிகளுக்கு மேலதிகமாக இறுவெட்டுக்களைப் போட்டுக் காட்டித் தட்டெறிதல் [illegible]கள் தந்தனர். எமது பயிற்றுனர் மயிதவாகனம், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் புனித தயாபரன், ஆசிரியர் கமலமோகன் ஆகியோர் பல்வேறு நுட்பங்களையும் கற்பித்தனர்.

**கே:** நீங்கள் தேசியமட்டத்தில் வெற்றி பெறக் காரணமாக இருந்தவர்கள் யாவர்?

**ப:** பலர் உள்ளனர். முக்கியமாக விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ள எனது பெற்றோரைக் குறிப்பிட வேண்டும். அதிகாலையிலேயே என்னை எழுப்பி ஒழுங்காகப் பயிற்சிக்கு அனுப்பியவர்கள் அவர்கள்தான். தேசிய மட்டப் போட்டிக்கு முதல் நாள் பயிற்சியின்போது எனது தோள் மூட்டில் 'நோ' ஏற்பட்டது. அதனைத் தொலைபேசியில் எனது தந்தையாரிடம் தெரிவித்தபோது அவர் "கை கழன்றாலும் பரவாயில்லை முதலிடம் பெற்றுக்கொண்டு வா" என்று சொன்னார். எமது பாடசாலை அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களும் தேவையான உபகரணங்களைப் பெற்றுத்தந்து, என்னை ஆசீர்வதித்துப் போட்டிக்கு அனுப்புவதோடு மட்டுமல்லாது, நான் வெற்றிபெற்றால் அடுத்த நாளே மேடைக்கு அழைத்துப் பாராட்டுவதும் எனக்கு ஊக்கத்தை ஏற்படுத்தியது. அதுமட்டுமன்றி எமது பாடசாலை மாகாண மட்டத்தில் 10 தங்கம், 12 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றிருந்தது.



பார்த்தீபன்

இதில் குறிப்பிடக்கூடிய இன்னொரு விடயம் என்னவென்றால் எனது சகோதரர் மகாராஜா கஜதீபன் 19 வயதுப் பிரிவு தட்டெறிதலில் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றிருந்தார். இதனால் தேசிய மட்டப் போட்டிக்கு எமது பாடசாலையைச் சேர்ந்த பெருமளவு மாணவர்கள் வந்திருந்தனர். அவர்கள் தந்த ஊக்கமும், எம்மை அழைத்துச்சென்ற ஆசிரியர்களான உமாசுதன், சிவாகரன், கமலமோகன் ஆகியோரும், ஆசிரியைகளான செல்வி சம்பந்தன், செல்வி டெய்சி தேவநாயகி, பழைய மாணவர்கள் ஆகியோரும் வெற்றிக்குக் காரணர்களாய் அமைந்தனர்.

**கே:** உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?

**ப:** உடற்கல்வி ஆசிரியராக வருவது தான் எனது இலட்சியம். எனது வெற்றிக்குக் காரணர்களாய் அமைந்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(செவ்வி: ம.பா.மகாலிங்கசிவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்து நெதர்லாந்து தமிழ் அமைப்புகள் அறிக்கை

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வரும் தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்து, நெதர்லாந்துத் தமிழ் அமைப்புகள் நன்றி தெரிவித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

எமது தொப்புள்கொடி உறவுகளான தமிழக உறவுகளே!

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான சிங்கள அரசின் இனப்படுகொலைக்கு எதிராக தொடர்ச்சியாக நீதி கேட்டு ஓங்கிக் குரல் கொடுக்கும் அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம், தமிழக அரசியல் கட்சிகள், சட்டவாளர்கள், வணிகர்கள், திரைப்பட- சின்னத்திரை கலைஞர்கள், திரைப்படத் தொழிலாளர்கள், நற்பணி மன்றங்கள், மீனவ சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள், ரசிகர் மன்றங்கள் உட்பட அனைத்துத் தமிழக உறவுகளுக்கும் முதலில் எமது நன்றிகள்.

உங்களின் இந்த எழுச்சியானது சிங்கள அரசிற்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இந்த எழுச்சியை அடக்கவும் தமிழக மண்ணில் சதி வேலைகளை மேற்கொள்ளவும் சிங்கள அரசும் அதற்கு துணை போகும் சில நாசகார சக்திகளும் நிச்சயம் முயற்சி செய்யும்.

அனைத்திற்கும் முகம் கொடுத்து, அவற்றை எல்லாம் முறியடித்து எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை ஜனநாயக வழியில் உங்கள் போராட்டங்களை தொடருங்கள். உங்களின் உதவிக்கரங்களை நாம் இறுகப்பற்றிக் கொள்கின்றோம். நிச்சயம் நாம் வெல்வோம்.

இன்று மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் தமிழின அழிப்பு உச்சம் பெற்றுள்ளது. பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளர்களாக வந்த வல்லரசு நாடுகள் எல்லாம் இன்று சிங்களத்தின் கொலை வெறித் தாண்டவத்தை தடுக்க முடியாத நிலையில் உள்ளன.

இந்நிலையில் எங்களுக்கு உதவ யாருமே இல்லை என்றிருந்த வேளையில், தொப்புள்கொடி உறவுகளான நீங்கள், வீதிகளில் இறங்கி நீதி கேட்டு எழுப்பும் குரல்கள் எமது மக்களுக்கு பெரும் ஆறுதலைக் கொடுக்கின்றது.

எமக்காக நீங்கள் இருக்கிறீர்கள் என்ற துணிவையும் புதிய உத்வேகத்தையும் ஆத்மபலத்தையும் எமக்குக் கொடுத்திருக்கிறது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 05 . 06 . 1917



உதிர்வு 18 . 10 . 2008

### திருமதி பொன்னையா நல்லம்மா
(கிளாக்கர் மகள்)

*எம் இனிய பாசமிகு அம்மாவே!*
*பெற்று வளர்த்தெம்மை ஆளாக்கி*
*வானுயர நாம் வாழ*
*எம்மை வாழ வைத்த நல்ல அம்மாவே!*

எங்கள் குலதெய்வம் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு சமுகம் தந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (17.11.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

க.கனகசபாபதி (மருமகன்),
42, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (79928)

## மரண அறிவித்தல்கள்

### சரவணை நடராஜா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை நடராஜா நேற்று (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை- தெய்வானை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சண்முகம்- பூரணம் தம்பதியரின் மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் இராசமலர், இராஜேஸ்வரன், ராஜேந்திரன், யோகராணி, ஸ்ரீதரன், கணேசன், ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தலிங்கம், விக்னேஸ்வரன், சிலோசனா, தேன்மதி, மஞ்சுளா, யசோ, காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2008) திங்கட்கிழமை பிற்பகல் 1மணிக்கு இலந்தைக்குளம் வீதி, மாம்பழம் சந்திக்கு அருகாமையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி சின்னம்மா,
மகன் குடும்பத்தினர் (இராஜேஸ்வரன்),
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல.100, இலந்தைக்குளம் வீதி,
மாம்பழஞ்சந்தி,
அரியாலை.
(79929)

### ஐ.அப்புக்கண்டு (வில்லியம்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மந்துவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐ.அப்புக்கண்டு (15.11.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் செல்வராசா (இத்தாலி), அற்புதமலர் (பிரான்ஸ்), ஞானமலர் (இலண்டன்), இரஞ்சிதமலர் (லெபனான்), சுதாராசா (இத்தாலி), தவமலர் (வவுனியா), குமுதினி (மந்துவில்), பிரேமராசா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நீனா, இராசேந்திரம், றொபின்சன், ஜெசிந்தா, ரகு, தவனேசன், வினோதராசா ஆகியோரின் அன்பு மாமனும் பவளம், மார்க்கண்டு, சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கிறிஸ்தவ முறைப்படி இன்று (17.11.2008) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.வினோதராசா (மருமகன்).

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (79927)

# கோப்பாய் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கோப்பாய், நவ.17

கோப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சைகாக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகக் காய்ச்சல் மற்றும் தொய்வு வருத்தங்களுக்காகவே அதிகளவு நோயாளர்கள் வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த மருத்துவமனையில் இயங்கி வரும் காசநோயாளர் விடுதியில் தற்போது 7 நோயாளர்களே தங்கிச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கடந்த பல மாதங்களோடு ஒப்பிடுகையில் தற்போது தங்கிச் சிகிச்சை பெறும் காசநோயாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-72)

## தவறிவிட்டது

நவாலி கிழக்கு, மானிப்பாய் என்னும் முகவரியுடைய நடராஜா சரஸ்வதி என்பவரின் தே.அ.அட்டை [525123111V] யாழ்.நகர் மத்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/555341)

## தவறிவிட்டது

"இதயவாசம்" சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியும் தவராசா உதயகுமார் என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை (853162264V) விசேட அ.அ., சாரதி அனுமதிப் பத்திரம், தொழில் அ.அ. 15.11.2008 அன்று கொக்குவிலுக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சேவாலங்கா மன்றம், 250, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0212227748, 0776589581


வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தோல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், நிறவு படிதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் படிவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(சி/555203)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லத்துரை குகநாதன்

பிறப்பு: 04.04.1942
இறப்பு: 10.12.2006
திதி: அபரபட்ச பஞ்சமி (17.11.2008)

அன்பின் சிகரமே, பாசத்தின் உறைவிடமே!
ஆயிரம் உறவு- இருந்தென்ன அகிலத்தில்
அப்பா என்று சொல்ல நீங்களில்லையே!

செல்வாத் தாயின் காலடி சென்று இரண்டு
ஆண்டுகள் சென்று விட்டன
நீங்கள் என்றும் எங்கள் இதயத்தின்
உள்ளக் கோயிலில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

ஓம் சாந்தி!

உங்கள் அன்பிற்கு ஏங்கி நிற்கும்:
மனைவி, மகன், மகள்,
மருமகன்.

*108, அரசடி றோட், கந்தர்மடம்.*
(79926)

## உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழா

நவாலி, நவ.17

வலி. தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், மானிப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டினேஷ் ஜெயக்குமார், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ப.வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (204-19)

## மரண அறிவித்தல்

### சுவக்கீன்பிள்ளை சாமிநாதர்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவக்கீன்பிள்ளை சாமிநாதர் நேற்று (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அக்கினேசம்மாவின் அன்புக் கணவரும் மேரி ஞானமலர், றுக்மணி (உப தபாலகம், சில்லாலை), யோசவ் அன்ரன் (தபாலகம், பண்டத்தரிப்பு), மனோறதி, அருட்தந்தை ஜெயறஞ்சன் (புனித யுவானியார் ஆலயம், சுண்டுக்குழி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராசா (இ.போ.ச.கோண்டாவில்), பெனிற்றா, விக்ரர்வில்லியம் (ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான மேரி யோசேப்பின், நீக்கிலாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, லூர்தம்மா ஆகியோரின் மைத்துனரும் நிலக்சன், நிருசன், ஜெறோசன், ஜெனோசன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிப் பயண நிகழ்வு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இன்று (17.11.2008) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட் தந்தை ஜெயறஞ்சன் (மகன்).

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (79925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரித்தாஸ் - கியூடெக்கின் தலைமை நிறுவனமான செடக்கின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இயக்குநர் அருட்திரு. ஜெயக்குமார் அடிகளார், ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் ஆகியோர் உரையாற்றுவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற ஒருவருக்கு புலம்பெயந்தோருக்கான நிறுவன இயக்குநர் எஸ்.நிக்கோலின் பரிசில் வழங்குவதை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## கோப்பாய் பிரதேச மருத்துவமனை புனரமைக்கப்பட்டது

கோப்பாய், நவ.17

கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியின் மூலம் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகள் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நீர்த்தாங்கி புனரமைப்பு, சுற்றுமதிலின் ஒரு பகுதி நிர்மாணிப்பு, மருத்துவமனைக்கு தீந்தை பூசுதல் ஆகிய பணிகளே நிறைவேற்றப்பட்டுள்ளன.

நீர்த்தாங்கி புனரமைப்பின் மூலம் முன்னர் அடிக்கடி ஏற்பட்ட நீர்த்தடைதற்போது ஏற்படுவதில்லை என நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். (202-72)

## காப்புறுதி நிறுவன பணியாளரைக் காணவில்லை

உடுப்பிட்டி, நவ.17

கரவெட்டி, துன்னாலையைச் சேர்ந்த காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் இளம்பெண் ஒருவர் கடந்த புதன்கிழமையில் இருந்து காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தியாகராஜா அனுசுஜா (வயது - 25) என்னும் இளம் பெண் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் கிளை அலுவலகத்தில் கடமையாற்றி வருகின்றார்.

சம்பவதினம் தனது மோட்டார் சைக்கிளில் கடமை நிமித்தம் செல்வதாகக் கூறி இரண்டு லட்சம் ரூபா பணத்துடனும் நகைகளுடன் புறப்பட்டதாகவும், மாலை வரை வீடு திரும்பாததால் யுவதியின் தந்தை நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்த்தார்.

நெல்லியடிப் பொலிஸார் நடத்திய தீவிர தேடுதலின் பலனாக மேற்படி யுவதியுடன் நிறுவனத்தில் பணியாற்றும் இரும்பு மதவடி,வதிரியைச் சேர்ந்தவரின் சகோதரியின் வீட்டில் காணாமற்போன மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டதுடன் வாலிபரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

எனினும் இதுவரை யுவதி சம்பந்தமான எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இவரை விசாரித்ததுடன் மேலும் தீவிர தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

(202-155)

### தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து

## இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய குடும்பங்கள் நிவாரணத்துக்கு அலைகின்றன

யாழ்ப்பாணம், நவ.17

வடமராட்சிப் பகுதியிலிருந்து கடந்த ஜூலை மாதம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிய 13 குடும்பங்கள் நலிந்த குடும்பங்களுக்கான நிவாரணம் பெறமுடியாமல் அலைகின்றனர்.

இரண்டு பிரதேச செயலகங்களிலும் நிவாரண அட்டை வழங்குவதில் இழுத்தடிப்பு செய்வதால் கடந்த மூன்று மாதங்களாக இரு பிரதேச செயலகங்களுக்கும் மாறி மாறி அலைவதாக முறையிடுகின்றனர்.

குடும்பப் பங்கீட்டு அட்டையை வடமராட்சியிலிருந்து தென்மராட் சிக்கு மாற்றியதால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நலிவுற்றோர் நிவாரண அட்டையைப் பெறுமாறு வடமராட்சிப் பிரேதச செய லகத்திலும் நலிவுற்றோர் நிவாரணப் பதிவுகள் வடமராட்சி பிரதேச செயலகத்தில் உள்ளதால் அங்கேயே நிவாரண அட்டை பெறுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உள்ளதால் அங்கேயே நிவாரண அட்டை பெறுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலகத்திலும் கூறப்படுவதால் இக்குடும்பங்கள் இரண்டு பிரதேச செயலகங்களுக்கும் அலைவதாக முறையிடுகின்றனர்.

இதேவேளை கடந்த ஒகஸ்ட் மாதம் வடமராட்சியிலிருந்து தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்த 6 குடும்பங்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நலிவுற்றோர் நிவாரண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களால் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து யாழ்.செயலகம் உயர் அதிகாரிகளுக்கு முறையிடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

(202-207)

## மரக்கடத்தலில் ஈடுபட்ட நபருக்கு ஆறு மாத சிறைத்தண்டனை

### மரம் ஏற்றிச் சென்ற லொறி பறிமுதல்

மந்திகை, நவ.17

அனுமதிப் பத்திரத்தை மீறி சட்ட விரோதமாக மரக்கடத்தலில் ஈடுபட்டவருக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதோடு சட்டவிரோதமாக மரத்தை ஏற்றிச் சென்ற லொறியைப் பறிமுதல் செய்யுமாறும் பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரவெட்டி, துன்னாலையைச் சேர்ந்த செல்வரட்ணம் பரமேஸ்வரன் என்பவர் லொறியில் ஏற்றிச்சென்ற மரங்களை நெல்லியடிப் பொலிஸார் திடீர்ப் பரிசோதனை செய்தனர். அப்போது அனுமதிப்பத்திரமின்றி மரங்கள் கொண்டு செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

இச்சட்டவிரோத மரக்கடத்தல் சம்பந்தமாக நெல்லியடிப் பொலிசார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

எதிரிதான் குற்றவாளி அல்ல எனத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து வழக்கு விசாரணை நீதிபதி கே.அரிய நாயகம் முன்னிலையில் இடம்பெற்று வந்தது.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது. நீதிமன்றம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு எதிரிக்கு 6 மாத சிறைத்தண்டனை விதித்ததுடன் சட்டவிரோதமாக மரத்தை ஏற்றிச் சென்ற லொறியைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டது.

அனுமதிப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருந்த மரங்களை உரிமையாளருக்குக் கையளிக்கும் படியும் மேலதிக மரங்களைப் பறிமுதல் செய்து அரச மரக்கூட்டுத் தாபனத்திடம் ஒப்படைக்கும் படியும் நீதிமன்றம் பணித்தது. (202-218)




## வீதிகள் புனரமைப்பு

சுழிபுரம், நவ.17

சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தையிலிருந்து பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படவுள்ளது.

அவ்வீதியைச் சேர்ந்த பொதுமக்கள் இணைந்து இவ்வீதியைப் புனரமைக்கவுள்ளனர்.

* * *

கோப்பாய் - இராச வீதி மீள்செப்பனிடல் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இதன்மூலம் இப்பகுதி விவசாயிகள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் போக்குவரத்தில் எதிர்கொண்ட சிரமம் நீங்கிவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-72)

* * *

நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகவிருந்த நவாலி அந்திரான் முருகமூர்த்தி வீதி மானிப்பாய் பிரதேச சபையினரால் தாரிட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

மக்கள் எவ்வித இடையூறுமின்றி சுலபமாக போக்குவரத்துச் செய்ய முடிகின்றதென்று தெரிவிக்கின்றனர். (202-100)

## உதவிக் கொடுப்பனவு

நவாலி, நவ.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் காசநோய், தொழுநோய் போன்றவற்றிற்கான உதவிப் பணங்களை பெறுபவர்களது இம்மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (202-100)

## சண்டிலிப்பாயில் மரக்கன்றுகள் விநியோகம்

நவாலி, நவ.17

தேசிய மரம் நடுகைத் திட்டத்தை யொட்டி வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேசி, பலா, கொய்யா, மாதுளை, மலைவேம்பு, ஜம்பு நாவல் போன்ற பயன்தரு மரங்கள் முன்பள்ளிக்கும் பொது அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன என பிரதேச செயலக சுற்றாடல் உத்தியோகத்தர் தெரிவித்தார். (202-100)

### ஜீ.சீ.ஈ. சாதாரணதர

## பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்கு ஆசிரியர்களின் விவரம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.17

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கென ஆசிரியர்களின் விவரங்களை வடமாகாண ஆளுநர் டிக்சன் சரச்சந்திரதீல கோரியுள்ளார்.

இது தொடர்பான கடிதம் மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பிவைத்தவர்களின் விவரங்களுடன், விண்ணப்பிக்காத தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் விவரம் இருப்பின் உடனடியாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களின் தனிப்பட்ட மற்றும் அலுவலக முகவரியுடன் தேவையான ஏனைய விவரங்களும் உள்ளடக்கப்பட்டு இருத்தல் அவசியம். இந்த அறிவித்தலை அவசியமானதும் அவசரமானதுமான அரச பணியாகக் கருதி உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை, இந்தப் பரீட்சை மதிப்பீட்டுக்கான பரீட்சகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை பாடசாலை ரீதியாக அதிபர்கள் பெற்று வலயத் திணைக்களத்தினூடாகப் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

குடாநாட்டைச் சேர்ந்த ஐந்து வலயப் பணிப்பாளர்களும், மன்னார்,வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர்களும் இந்த மாதம் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன் இவற்றை அனுப்பிவைக்க வேண்டும். அத்துடன் பிரதியை வடமாகாண கல்வி திணைக்களத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-392)

## கோப்பாய் கோவில்குளம் புனரமைக்கப்படவில்லை இதனால் நீரைப் பேணமுடியாதுள்ளதாக விசனம்

கோப்பாய், நவ.17

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில் குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால் உரிய நீர்கொள்ளளவை பேணமுடியாதுள்ளதாகப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 வருடங்களுக்கு முன் புனரமைக்கப்பட்டு ஆழமாக்கப்பட்டபின் இதுவரை பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வில்லை. அத்துடன் இக்குளக்கட்டின் நீர் வழிந்தோடும் விளிம்புப் பகுதியை விஷமிகள் உடைத்துள்ளதாலும் நீர் நிரம்பினாலும் உடனடியாகவே வெளியேறிவிடுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (202-72)

## வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்தோருக்கென அச்சுவேலியில் தனியான கூ.சங்கக் கிளை

யாழ்ப்பாணம், நவ.17

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வாழும் மக்களுக்குரிய நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்கு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையம் அச்சுவேலியில் இராச வீதியில் திறக்கப்படவுள்ளது.

திறப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும்.

வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் தலைமையில் மூத்ததம்பி விநாயகமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன், வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையிலுள்ளோருக்கான ஆக்கத் திறன் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ.17

அரச சேவையிலுள்ள ஊழியர்களின் கலை, இலக்கிய ஆற்றல்களை ஊக்குவிக்கும் நோக்கில் கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சு ஆக்கத்திறன் போட்டிகளை நடத்தி வருகின்றது.

இவ் வருடம் நடத்தப்பட்ட போட்டிகளின் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**பாடல்**

எஸ்.சந்திரசேகர் (வேலணை மத்திய கல்லூரி), திருமதி ரி.கிருஷ்ணசாமி (மீசாலை வீரசிங்கம் ம.வி), சி.பஞ்சநாதன் (கோப்பாய் கந்தவேள் த.க.பாடசாலை), ஆர்.கார்த்திகா (யாழ்ப்பாணம்), ஆ.சிறீபூரதனி (மானிப்பாய் கிளை, இலங்கை வங்கி).

ஆர்.பொன்னம்பலம் (வலி.வடக்கு பிரதேச செயலகம்), ஏ.ஜே.றொனால்ட் (சாவகச்சேரி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்), கே.குகநாயகி (கற்கோவளம் மெ.மி.த.க.பா), கே.நவநீதன் (தொண்டைமானாறு வி.எம்.வி.).

**சிறுவர் கதை**

திருமதி ஏ.குமாரதாசன் (வேலணை மத்திய கல்லூரி), ஜி.ஜெஸ்ரின் (யாழ். பொது நூலகம்), சி.எல்.எம்.மன்சூர் (மன்னார் மத்திய கல்லூரி), திருமதி கே.வரதலோஜன் (கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி), திருமதி ரி.அனோஜன் (மூளாய் சிவப்பிரகாசம் வித்தியாலயம்).

திருமதி எஸ்.வேதநாயகம் (மட்டக்களப்பு மாநகர சபை), திருமதி எம்.ஏ.சுமைரா (குருநாகல்), திருமதி எஸ்.கணேசானந்தன் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி).

**சிறுகதை**

ஏ.எஸ்.பாய்வா (பிரதேச செயலகம், மட்டக்களப்பு), திருமதி எம்.ஏச்.எஸ்.மசீடா (கட்டுக்கஸ் தோட்ட), எஸ்.றமேஸ்வரன் (கொழும்பு-7), கே.முருகமூர்த்தி (யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.), கே.குகநாயகி (யா.கற்கோவளம் மெ.மி.த.ஆ.பா., பருத்தித்துறை).

என்.சந்திரசேகரன் (மாத்தளை), பி.உதயகுமார் (தபால்கந்தோர், அளவெட்டி), யு.சுகான்ஜனன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை வடக்கு).

**கவிதை**

வி.மைக்கல்கொலின் (பிரதேச செயலகம், மட்டக்களப்பு), ஆர்.பி.ஜெயசீலன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்), யு.சீவரத்தினம் (யா/சிறியபுஸ்பம் மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை), ஏ.எஸ்.பாய்வா (பிரதேச செயலகம், மட்டக்களப்பு).

நூர்டீன்நாடீர் (கிண்ணியா), வி.எஸ்ராஜன் (மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை), ஏ.ஜே.றொனால்ட் (பிரதேச சுகாதாரப் பிரிவு, சாவகச்சேரி), திருமதி ஆர்.எம்.தவநாயகம் (மக்கள் வங்கி அச்சுவேலி).

**நாடகம்**

எஸ்.சந்திரசேகம் (யா/ வேலணை மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), ரி. விஜிகலா (யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, வட்டுக்கோட்டை), கே. வரதலோஜன் (யா/ சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை), யு. சீவரத்தினம் (யா/சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை).

எஸ்.யேசுராஜா (யா.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொழும்புத்துறை), ஜே.தர்மராஜா (நீர்பாசனப் பொறியியலாளர் பகுதி, யாழ்ப்பாணம்), ஆர்.இராமலிங்கம் (தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி), திருமதி எம்.மாதவநாதன் (பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை).


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1037 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

27 34 46 49

கன்னி

14-11-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500208481 - 500228916

ஜக்பொட் பரிசு ரூபா. 6,811,575/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,844 | 20/- | 4,476,880/- |
| 2 இலக்கங்கள் | 20,577 | 40/- | 823,080/- |
| 1 இல. + லக்கினம் | 20,405 | 60/- | 1,224,300/- |
| 2 இல. + லக்கினம் | 1,850 | 200/- | 370,000/- |
| 3 இலக்கங்கள் | 539 | 1000/- | 539,000/- |
| 3 இல. + லக்கினம் | 62 | 10,000/- | 620,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,811,575/- | - |
| மொத்தம் | | | 8,653,260/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 267,285 | | 9,153,260/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,311,400/-

தொடர் இலக்கம் 400206563 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 நொவெம்பர் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 500215703-8-08 |
| புத்தளம் | 500216255-3-44 |
| கேகாலை | 500221524-2-21 |
| கம்பஹா | 500226108-8-35 |
| மட்டக்களப்பு | 500216947-8-31 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
35, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



## துணை தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் வசிக்கும் தங்கள் தேவைகளை தாங்களே கவனிக்கத்தக்க வயோதிப தம்பதியருக்கு துணையாக வசிக்கக்கூடிய பொறுப்புகளற்ற 55 வயதுக்குட்பட்ட ஒரு பெண்/ஆண் தேவை. அவருடைய வாழ்க்கைக்குரிய செலவுகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும். பகுதி ஊனமுற்ற நடமாடக்கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். முதல் தொடர்பிற்கு தொ.பே.இலக்கம் தந்தால் நல்லது. சமூகசேவை விரும்பிகள் வழிகாட்டினால் நன்றி.

விளம்பர இலக்கம் 3160
C/o/பா.உதயன்.

(79923)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



### திருமதி சதாசிவம் சரஸ்வதி

பிறப்பு 15.12.1930 இறப்பு 18.10.2008

கடந்த 18.10.2008 அன்று சிவபதம் அடைந்த சதாசிவம் சரஸ்வதியின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.11.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
0602212760 (ஜ/555341) மருமக்கள்.

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 . 03 . 1941



விண்ணில் 26 . 11 . 1991

### அமரர் செல்லத்துரை கனகசபாபதி
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)


திதி: 17.11.2008

எங்கள் அன்புத் தெய்வமே!
என்றும் ஒளிர்கின்ற சுடராய்
எம் இதயங்களில் வாழ்கின்றீர்!!

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (79822)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் பொன்னு இராசையா

தோற்றம்: 12.03.1934 மறைவு: 18.10.2008

18.10.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் பொன்னு இராசையா அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று [17.11.2008] திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர்க் காணிக்கைப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசியில் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னங்கை,
உரும்பிராய் மேற்கு.

மனைவி: பொற்கொடி,
மகன்மார்: கணேச[illegible],
சிவனேஸ்வரன் (லண்[illegible]

(79732)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 15 . 04 . 1928



ஆண்டவன் அடியில் 18 . 10 . 2008

### திருமதி தெய்வானைப்பிள்ளை தங்கராசா

*பிள்ளைகளே பெருஞ்சொத்தாய் வளர்த்த தாயே- எமை*
*பெருந்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றதெங்கே?*
*அவனிதனில் எங்களது வாழ்வு சிறக்க*
*ஆலமரமாய் நின்று நிழல் கொடுத்து- எமை*
*ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றதெங்கே?*

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறையருளை இறைஞ்சி நிற்கின்றோம்.

எமது தாயின் மரணச்செய்தி கேட்டுவந்து பலவகையிலும் உதவிபுரிந்து ஆறுதல் கூறிய (தொலைபேசி, தந்திகள் உட்பட) அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவரையும் 17.11.2008இல் எமது வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தகவல்:
இரவீந்திரா விமலா குடும்பத்தினர்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
(79904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

**T / 31 / I** **ENGLISH LANGUAGE** **One hour**

Prepared: by - **S.STEPENSON** Colombo - 14.

## Part - I

1. Your English teacher asked you to write about what you did last Saturday. You wrote it out. But your brother tore it up by mistake. Here are the pieces. Put them in the correct order by writing the correct number in each cage. The first one has been done for you.
   a) Last Saturday early in the morning I woke up from my bed. ( 1 )
   b) Later I went to the supermarket with my mother and bought some food items. ( )
   c) I prayed to god and said hymns for ten minutes. ( )
   d) I went to the bathroom and answered the call of nature. ( )
   e) I had my breakfast of bread and butter with my parents. ( )
   f) I brushed my teeth and had a good shower bath. ( )

2. Read the following passage and the statements given below. Put a tick ( ) in the box against the correct statement and a cross ( ) in the box against the incorrect ones.

   Pele widely acclaimed as the greatest Soccer player the world has produced, celebrated his 60th birthday on Monday with no indication. That any one ever up stage his achievement. The Brazilian was said to be spending the day in Prague and would be travelling to Zurich later according to his official website pele.net.

   Born in a small town of Tres coracoes in the Brazilian state of Minas Gerais. The legendery figure reaches the landmark in excellent health.

   "When I retired from soccer I weighed 78 kilos and today I am 80 or 81 kilos" He said in a recent interview.

   1) Pele was a cricket player ( )
   2) Pele has celebrated his 60th birthday ( )
   3) Pele was born in a city ( )
   4) Pele was a Brazilian Soccer player ( )
   5) He has personal or official website now ( )

3. Match the dictionary definitions below and write the word in the blanks. The words are also given below.

   1) The act of destroying or state of being destroyed ......................
   2) Very strong wind ......................
   3) Suffering or death from lack of food ......................
   4) A terrible unhappy or unfortunate event ......................
   5) Sudden fall of earth or rocks down a hill or cliff ......................

   (Disaster, Tragedy, Cyclone, Starvation, Landslide)

4. This is an application from for the post of computer programmer. Fill in the blanks with correct words.
   1) Full name : ..........................................
   2) Permanent Address : ..........................................
   3) Date of birth : ..........................................
   4) Age : ..........................................
   5) Sex : ..........................................
   6) Civil status : ..........................................
   7) Nationality : ..........................................
   8) Religion : ..........................................

   9) Educational Qualification :

   G. C. E O/L
   1) ............................ ........ 5) ............................ ........
   2) ............................ ........ 6) ............................ ........
   3) ............................ ........ 7) ............................ ........
   4) ............................ ........ 8) ............................ ........

   G. C. E A/L
   1) ............................ ........
   2) ............................ ........
   3) ............................ ........
   4) ............................ ........

   10) Professional Qualification :

   11) Names of two non related referees :
   ............................ ............................
   I hereby certify that the above statements are true and correct.
   ............................ ............................
   Date Signature

5. Read the given paragraph. Write it again in the past tense.

   He designs houses, banks and office buildings. He builds many storey buildings and hotels. He also teaches small classes of students as he wants the younger generation to share his knowledge. He is considered to be an important person in the society.

6. In what situations can we make the following wishes. Select the situation from the box and write the number in the space given. The first one is done for you.
   (a) Wish you all the best ......................
   (b) Many happy returns of the day ......................
   (c) Wish you a safe journey ......................
   (d) May you have the strength to bear your loss ......................
   (e) May you get well soon ......................
   (f) Wish you a happy and prosperous new year ......................
   (g) May you reach home safey ......................
   (h) May you lead a happy wedded life. ......................

   (1) At a wedding
   (2) On a birthday
   (3) At a sick bed
   (4) Before a long trip
   (5) At dawn of a new year
   (6) Before an examination
   (7) On a difficult journey
   (8) On losing a loved one

7. Trainee Banking Assistant

   Great opportunity to join the Seylon Bank.
   For application forms and further details write to,
   Human Resources Manager,
   Human Resources Department,
   196 , York street,
   Colombo - 01.

   Write a letter making a request for an application form and for more details. ( 75 words)

## Part - II

8. Read the following summaries about 5 books. Now match the summaries with title of the book. Write the number of the summary against the title.

   1. Twenty thousand leagues under the sea describes the voyage of the submarine. The main source of power of Jules Vernos submarine was water electricity some think uncommon even nowa days.

   2. Famous five is very interesting. Its about Julias Dick George Ann and Timothy the dog. It happens when Georges father loses three papers he had worked for three years and the five go searching for them.

   3. The little Orphan girl urges everyone who reads. "The insulted and the humiliated" to do some thing drastic to make the world better. It shows that people even grudge the children innocence.

   4. The most beautiful words ever written in English Language are the immortal plays by Shake speare. His unparalled literature speaks not only to the lords of high society but also to the beggars on the street. He portrays men of strength and weakness, pride and humility. Julius Casar is a tragedy which portrays the Roman empire and its destruction.

   5. Oliver Twist and his companions suffered slow starvation for three months. At last they got so wild with hunger that one boy who was big for his age said he was afraid that one night he might eat the weak young lad who slept next to him. In this way the writer expressed the feelings of innocent poor people and children and the rich villains and hypocrites.

   (a) Julius Caesar by William Shakespeare ( )
   (b) Famous five by Enid Blyton ( )
   (c) Oliver Twist by Charles Dickens ( )
   (d) Twenty thousand leagues under the sea by Jules Vern ( )
   (e) The insulted and the humiliated by Dostoyeusky ( )

09. This paragraph tells us about the FR case hearing. Choose the correct word from the brackets and complete the following paragraph by filling in the blanks.

   The fundamental right petition ............... (1) (Filed, file, was filed) by the film director Prasanna Vitange ................. (2) (challenged, challenging, was challenged) the suspension of his film "Purasanna Kaluwara" ................. (3) (go, went, has go) down for futher hearing for November 20th after state counsel .................. (4) (appearing, appeared, appears) for the Narional Film Corporation ............. (5) (ask, asked, asks) court for time to ..................... (6) (consult, consulted, has been consulted) his clent for fresh instruction.

   Director Vithanage ................. (7) (is, was, were) claiming Rs.5 million as damages ................ (8) (by, from, as) the NFC for alleged infringement of his fundamental rights in ............... (9) (carry, carrying, carried) out the directive of Minister Sarath Amunugama................. (10) (who, was, where was, when was) in charge of the subject of local film industy to ..............(11) (suspend, suspended, has been suspended) the film on grounds its screening would ...............(12) (affects, affect, affected) the morale of soldiers fighting the war.

   Counsel for Petitioner Upul Jeyasuriya .................(13) (tell, told, telling) the court that minister..............(14) (had acted, has acted, has been acted) in excess of his powers ................. (15) (since, until, from) the film corporation. Act entrusts ................ (16) (himself, him, thereself) only with the development aspect and the distribution of film ................ (17) (which had, which has, which have) nothing to do with security.

   Besides the film ............... (18) (was cleared, were cleared, cleared) for screening by the public performances board ................ (19) (which had, which has, which have) five security personal in its panel and that PPB came under the purview of the Defence Ministy. The Bench ............... (20) (was comprised, comprised, comprise) Justices Dr. A.R.B.Amarasinghe, S.W.B.Wadugodapitiya PC and LHG Weerasekara.

10. Read the following instructions. Put the numbers of the correct column.
   01) More chance to get a good education.
   02) More transport facilities.
   03) We can breath good air.
   04) There are no unnecessary noises.
   05) More chance to get a good job and make money.
   06) Beautiful and calm environment.
   07) We can get natural and fresh food.
   08) Can see good natural beauty.
   09) More expenses.
   10) More chance to spend a leisure time in a happy way like cinema, drama, beach and park etc.

   | | In a city | In a village life |
   |---|---|---|
   | 1. | .................... | .................... |
   | 2. | .................... | .................... |
   | 3. | .................... | .................... |
   | 4. | .................... | .................... |
   | 5. | .................... | .................... |

11) Complete the following text by filling the second half of the word.

   Sri Lanka should stri............ (1) to become self suff ............ (2) in food to face the impen ..........(3) world food shortage predicted by agricu ............. (4) experts said agriculture Minister T.M.Jeyaratna. He was spea .............. (5) after assu ............... (6) duties at the agricul ture ministy. Minister jeyaratna said he will take measur ..................... (7) to face any adv ...................... (8) situation which could aff ............. (9) food prod .........................(10)

12. Here are some score cards. The match was held between Australia and South Africa. South Africa won the match and you want to write a summary based on these score cards.

   | Australia | | South Africa | |
   |---|---|---|---|
   | Mark Waugh | - 110 | Lance Kilusner | - 129 |
   | Michal Bevan | - 80 | Jack Kallis | - 81 |
   | Richy Ponting | - 63 | Gary Kirsten | - 64 |
   | Stev Waugh | - 50 | | 274 |
   | | 303 | | |

   Austalia won the match by - 29 runs.
   ..................................................................

13. Write an essay about an advantages and disadvantages of city life.

அன்புக்குரிய ஆசிரியர்களே,
நீங்களும் சுயமாக வினாத்தாள்கள் தயாரிக்கும் ஆற்றல் உடையவர்களாக இருந்தால் உங்களையும் எமது கல்விச்சுடர் அரவணைத்து அதன் தரம் அறிந்து பிரசுரம்செய்து உங்கள் வினாத்தாள்கள் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து பகுதி மாணவர்களையும் (உதயன் - சுடர்ஒளி) மூலம் பயன்பெற செய்வதற்கு கல்விச்சுடர் தயாராக உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
வினாத்தாளையும் விடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி: கல்விச்சுடர் உதயன் பத்திரிகை,
362, காஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு :-
மின்னஞ்சல் : newkalvisudar@yahoo.com.
தொலைபேசி : 071-6850005 / 071-4273035
தொலைநகல் : 021-2229944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ விரதங்களில் சிறப்புமிக்கது சோமவார விரதம்

## இன்று கார்த்திகை மாதத்து சோமவார விரதம் ஆரம்பிக்கிறது.

எமது வாழ்நாள் முழுவதும் எம்மைக் காத்து வாழவைக்கும் இறைவனை வாழ்த்தித் துதித்தலும், வாழ்வுக்குரிய வரங்களை அருளுமாறு இரந்து வேண்டுவதும் சைவ சமயத்தவர்களது வழக்கமாகும். பிறரை வாழ்த்துவது நாம் வாழ்வதற்கே என்ற உட்பொருளை அனைவரும் உணர வேண்டும். அன்புள்ள இடத்தில்தான் இன்பம் உண்டு. நமது பெரியோர்கள் இறைவனை இன்பமே, என்னுடைய அன்பே என்றே இணைத்துக்காட்டி இறைவன் இன்ப அன்பு வடிவானவன் என்பதை நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். மனித வாழ்வில் நாம் முன் செய்த வினைப்பயனே எம்மை இப்பிறவியில் ஆற்றுப்படுத்துகிறது என்பது சைவர்களது நம்பிக்கை ஆகும். எது

### சோமவார விரதாரம்பம்

எவ்வாறாயினும், ஒருவரை வாழ்த்தும் போது நிறைவான வாழ்வு மலர வாழ்த்துதல், வழிபாடு செய்தல் மக்கள் பண்பாகும்.

சோமவார விரதம், சிவராத்திரி விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், கேதாரவிரதம், கலியாணசுந்தரர் விரதம், மூலவிரதம், இடபவிரதம் மற்றும் பிரதோஷ விரதம் போன்றவை சிவ விரதங்கள் எனப்படும்.

உக்கிரபாண்டிய மன்னன் அரசாண்ட காலத்தில் கிரகநிலை பிழைத்தமையால் மேகங்கள் மழை பொழியவில்லை. சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றும் வறுமையால் வாடி நலிவுற்றன. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தத்தம் நாட்டின் வறுமையைப் போக்க வழிதேடி அகத்திய முனிவரிடம் சென்றனர். முனிவரிடம் தங்கள் நாட்டில் மழையின்மையால் மக்கள் வறுமையில் வாடுவதை எடுத்துக் கூறினர். இதைக் கேட்ட அகத்திய முனிவர் கிரகங்களின் நிலைகளை ஆராய்ந்து மூவேந்தர்களையும் நோக்கி ''அரசர்களே சூரியன் செவ்வாய்க்கு முன்னே செல்ல, சுக்கிரன் பின்னே செல்லும் நிலை காரணமாக மழை பெய்யாது. ஆதலால் நீங்கள் மழை வருவிப்போனாகிய'' இந்திரனிடம் சென்று முறையிடுங்கள் என்று கூறினார். மூவேந்தர்கள், ''முனிசிரேஷ்டரே! இந்திரனைக் காண வானுலகிற்கு நாங்கள் எவ்வாறு செல்ல இயலும்?'' என வினாவினார்கள்.



ஐம்பொறிகளையும் வென்ற குறுமுனி அகத்தியர், ''சோமவார விரதத்தை நோற்று, வெள்ளியம்பல வாணனின் திருவருளைப் பெற்று ஆகாய மார்க்கமாகச் செல்லக் கடவீர்!'' என்று கூறி சோமவார விரதம் நோற்கும் முறைமையைக் கூறியருளினார்.

சோமவார விரதம், உச்சிப்பொழுதிலே உண்ணல், இரவிலே உண்ணுதல், உண்ணாதொழிதல், நித்திரை செய்யாதிருத்தல், நான்கு ஜாமமும் சிவபூசை செய்தல், என ஐந்து வகைப்படும்.

இவ்விரதம் அனுட்டிக்கும் காலம் ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், பன்னிரண்டு வருடம், வாழ்நாள் வரை என பல கால இடைவெளிகளாகக் கொண்டமையும். இவ்விரதத்தை விதிப்படி அனுட்டிப்பவர்கள், கொடிய பகையும் மனத்துயரும் நீங்கி, ஆயிரம் பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கப் பெற்று சிவகதி அடைவார்கள். ரிஷிகளும், நம் முன்னோர் பலரும் சோமாவார விரதத்தை முறைப்படி அனுட்டித்து நற்பேறு பெற்ற வரலாறுகள் நிறையவே உள்ளன.

இந்த நல்விரதத்தை நோற்பவர் விவாகப் பேறு, மக்கட்பேறு, நல்வாக்கு, கல்வி, பொன், போகம், பகைவரை வெல்லுதல், நோயற்ற வாழ்வு முதலிய பலாபலன்களை எண்ணியதை எண்ணியாங்கு எய்துவர் என்பது சைவ சமயத்தவர்கள் மத்தியில் ஆண்டாண்டு காலமாக நிலவி வரும் நம்பிக்கையாகும். எனவே நாமும் இக்கார்த்திகைத் திங்களில் சோமவார விரதத்தை முறைப் படி அனுட்டித்து இறைவன் அருளைப் பெறுவோமாக!

வசந்தராணி சண்முகம்

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.17

நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் உலக உணவுத் திட்ட நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட சமையலறைக் கட்டடம் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

நாவாந்துறைப் பங்குத்தந்தை அருட்திரு. எம்.வி.ஈ.ரவிச்சந்திரன் அடிகளார் விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார். (202)

* * *

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவின் பெற்றோர் தின விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐ.நா.அபிவிருத்தி நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் வி.நிசாந்தன் தம்பதியர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (202)

* * *

வடமராட்சி, நவ.17

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய ஒளிவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் ஆ.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு.எப்.எக்ஸ்.பெனாட் றெக்னோ அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாகப் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வண.போதகர் ந.அருள்நாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (202-236)

# ஆயுள் வேத அபிவிருத்தி மாதத்தில் பல்வேறு செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.17

நவம்பர் மாதத்தை - இந்த மாதத்தை - ஆயுள்வேத அபிவிருத்தி மாதமாகக் கருதி ஆயுள்வேத அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உள்ளூராட்சி மன்ற ஆயுர் வேத வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சி மறுசீரமைப்பு வேலைத் திட்டத்திற்கமைய நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் ஆயுள்வேத அபிவிருத்தி மாதமாகக்கருதி செயல்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(202-236)

# ராசி பலன்

17-11-2008 முதல்
23-11-2008 வரை

பொ.சந்திரலிங்கம்




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர் களால் பிரச்சினைகள் வர வாய்புண்டு.




**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.




**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர், பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில்போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். பொதுவாக இவ்வாரம் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.




**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்காது. உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன் னேற் றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் தொல்லையுண்டு.




**மகம், பூரம், உத்தரம் 1**

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப் புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட் டம் குறையலாம். தொழில்துறை முன்னேறலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். ராகு, கேது வழிபாடு செய்யின் நல்ல பலன் அதிகரிக்கும்.




**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை குறை நிலவும். உறவினர் அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையு டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.




**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் அதிகம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். சனீஸ்வர வழிபாடு செய்வது நலம்.




**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர் கள் விசுவாசமாக இருப்பர்.




**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியசித்தியுண்டு. பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷடம் உண்டு. தெய்வீகஈடுபாடு அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.




**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும்.பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷடம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறும்.நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனதில் இனம் புரியாத பயம் இருக்கும்.




**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கில்

# மீட்கப்பட்ட பிரதேசங்களின் நிர்வாகத்தை அந்த மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்

### அமைச்சர் டிலான் பெரேரா கூறுகின்றார்

கொழும்பு,நவ.17

வடக்கு-கிழக்கில் மீட்கப்பட்ட இடங்களை நிர்வகிக்கும் மற்றும் அபிவிருத்தி செய்யும் பொறுப்புக்களை அப்பகுதி மக்களிடமே ஒப்படைக்கவேண்டும் என்று அமைச்சர் டிலான் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் வரவு- செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களின்பிரச்சினையை நம்அரசியல் ரீதியாகவேதீர்த்துவைக்க வேண்டும். அவர்கள் அனுபவிக்கும் துன்பத்தை இனங்கண்டு அவர்களுக்கு நிவாரணமளிக்க வேண்டும்.

இப்போது தொடரும் யுத்தத்தை எமது எதிர்காலச் சந்ததியினரும் முன்னெடுத்துச் செல்லக்கூடாது. தற்போது யுத்தத்தில் ஈடுபடும் படையினரின் பிள்ளைகளும் 20 வருடங்களுக்குஅப்பால் யுத்தத்தில் ஈடுபடும் நிலையை நாம் தோற்றுவிக்கக்கூடாது.

யுத்தம் காரணமாக தமிழ் மக்களின் பகுதிகள் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளன. தற்போது படையினரால் மீட்கப்படும் வடக்கு - கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை நாம் அப்பகுதி மக்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

அந்த அபிவிருத்திப் பணிகளை கொழும்பில் இருப்பவர்களால் வழிநடத்த முடியாது. வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களுக்குத்தான் உண்மையான தேவை தெரியும்.

தமிழர்களின் பிரச்சினை அரசியல் தீர்வின் ஊடாகவே நீக்கப்படவேண்டும். நான் இவ்வாறு கூறும்போது நான் அதிகாரப் பகிர்வு பற்றியும், நாட்டைப் பிரிப்பது பற்றியும் பேசுகிறேன் என்று ஜே.வி.பியினர் என்மீது பாயக்கூடும்.

பொலிஸ் சேவையில் தமிழ்மொழி பேசுவோருக்கு அதிக வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று அரசதுறைகளிலும் தமிழ்மொழிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

வடக்கில் உள்ளவர்களும் எமது மக்கள்தான். அவர்களை நாம் வாழவைக்க வேண்டும்.

முழு உலகமுமே இன்று மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. இதற்கு அமெரிக்க ஜனாதிபதியாகப் பராக் ஒபாமா தெரிவுசெய்யப்பட்டமை சிறந்த உதாரணம் -என்றார்

## விவசாயிகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.17

சாவக்கச்சேரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி ஜங்கரன் மணிமண்டபத்தில் விவசாய போதனாசிரியர் அ.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நெல் உற்பத்தி, விதைநெல் உற்பத்தி, சோளன், நிலக்கடலை, குரக்கன் உற்பத்தி மற்றும் சேதனப் பசளை, ஒருங்கிணைந்த பண்ணையாளர், பெண் தலைமைத்துவ விவசாயம் ஆகிய எட்டுப் பிரிவுகளிலிருந்து 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202-207)

## பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பு 42 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

கொழும்பு, நவ.17

மஹிந்த ராஜபக்ஷ அரசின் 2009ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 42 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இதற்கு ஆதரவாக 127 வாக்குகளும், எதிராக 85 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசுடன் இணைந்து இ.தொ.கா., ஜாதிக ஹெல உறுமய, மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

ஐக்கியதேசியக்கட்சி,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வாக்கெடுப்பைக் கோரியதைத் தொடர்ந்தே வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இந்த வரவு-செலவுத் திட்டம் இம் மாதம் 6ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றதில் சமர்ப்பிக்கப்பட்டது.

மறுநாள் ஏழாம் திகதி முதல் நேற்று வரை ஏழு நாள்களாக வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

இரண்டாம் வாசிப்பின் போது வாக்கெடுப்பு நடத் தப்பட்டு வாக்குகளால் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

இன்று திங்கட்கிழமை வரவு - செலவுத் திட்டத்தின் அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் தொடக்கிவைக்கப்படும்.

டிசெம்பர் மாதம் 8ஆம் திகதிவரை இந்த விவாதம் 16 நாள்களாக நடத்தப்படும். 8ஆம் திகதி மாலை வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நடைபெறும். (அ-சி)

## பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் தமிழருக்கு தமிழீழம் வழங்கப்படுமா?

### ஐ.தே.க.உறுப்பினர் நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, நவ.17

வடக்கு-கிழக்கில் புலிகளின் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டதன்பின் தமிழ் மக்களுக்கு தமிழீழம் வழங்கப்படுமா என்று ஐ.தே.க. எம்.பி. ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

கிழக்கு மாகாணம் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டு அங்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டத்தைத் தொடர்ந்து அம்மாகாணத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேவையான நிதியை அம் மாகாணத்திற்கு ஒதுக்கியுள்ளார் என்று அமைச்சர் சுசந்த புஞ்ஜி நிலமே கூறினார்.

கிழக்கு மாகாணத்திற்குத் தேவையான அனைத்தையும், 'கிழக்கின் உதயம், திட்டத்தின் கீழ்' வழங்க ஜனாதிபதி தயாராகவிருக்கிறார் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

கிழக்கின் உதயத்தின் கீழ் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் போன்றவை கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்படுமா என்று ரவி கருணாநாயக்க அமைச்சரிடம் கேட்டார்.

பயங்கரவாதத்தை ஒழித்து கிழக்கு மாகாண மக்களுக்குத் தேவையான அனைத்தும் வழங்கப்படும் என்று அமைச்சர் பதிலளித்தார்.

அப்படியாயின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியதன் பின்னர் தமிழீழமும் வழங்கப்படுமா என்று ரவி கருணாநாயக்க மீண்டும் கேள்வி எழுப்பினார். (அ-சி)

## கற்கோவளம் புனித நகரில்

# இடைநிறுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தை பூர்த்தி செய்ய லயன்ஸ் கழகத்திடம் கோரிக்கை

### இணைந்த நிதி கேட்கிறார் பிரதேச செயலர்

வடமராட்சி, நவ.17

சுனாமி வீட்டுத்திட்டத்தின் கீழ் கற்கோவளம் புனித நகரில் பூர்த்தி செய்யப்படாத வீடுகளுக்குத் தேவையான இணைந்த நிதியை வழங்கி அவ்வீடுகளைப் பூரணப்படுத்த உதவுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் லயன்ஸ் கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புனித நகரில் சுனாமி வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு தென்னிந்திய திருச்சபை வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்தது. இவ்வீடுகள் அனைத்தும் கட்டப்பட்டு கூரை போடும் வரை பூர்த்தி செய்யப்பட்டது. இவ்வேலைகளுடன் தென்னிந்திய திருச்சபை வீடுகளைப் பூர்த்தி செய்யும் பணிகளை நிறுத்தி விட்டது.

இது தொடர்பாக பயனாளிகள் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு தமக்குரிய வீடுகளைப் பூரணப்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர், இந்த 20 வீடுகளையும் பூர்த்தி செய்யத் தேவையான இணைந்த நிதியை வழங்கி வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்துமாறு லயன்ஸ் கழகத்தைக் கேட்டுள்ளார். (202-236)

## தென்னிலங்கை மக்கள் நேற்று வெற்றிக் களிப்பில்

கொழும்பு,நவ.17

படையினரால் பூநகரி பிரதேசம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து படையினரும், இராணுவத் தளபதி மற்றும் படைத் தளபதிகளும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வாழ்த்து மழையில் நனைந்ததாகச் செய்திகள் வெளியாகின.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் படையினருக்குப் பாராட்டுச் செய்திகள் குவிந்த வண்ணம் இருந்தன.

பூநகரி மீட்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்ட மறுகணமே தென்னிலங்கையில் பெரும்பான்மையின மக்கள் வெடி கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தமக்கிடையே வெற்றிச் செய்தியையும், இனிப்பு வகைகளையும் பரிமாறிக் கொண்டனர்.

தொலைக்காட்சி மற்றும் வானொலிகளிலும் விசேட செய்திகளுடன் படையினருக்கு வாழ்த்து தெரிவிக்கும் விசேட நிகழ்சிகளும் இடம்பெற்றன. (அ-02)

## தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான கவிதை, கட்டுரை போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.17

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினர், தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய ''புகைத்தல், போதை வஸ்து பாவனையை நீக்கி நல்லொழுக்கத்தைப் பேணல்'' என்னும் விழிப்புணர்வு தொடர்பான கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**கட்டுரை**

***கீழ்ப் பிரிவு:*** குணரத்தினம் நிகேதன்- மீசாலை வீரசிங்கம் ம.வி, இரங்கநாதன் சிந்துஜா-மீசாலை வீரசிங்கம் ம.வி, ஸ்ரீ.தனுஜா-உசன் இராமநாதன் ம.வி.

***மத்திய பிரிவு:*** சின்னத்தம்பி லக்ஸியா- மீசாலை வீரசிங்கம் ம.வி, தங்கராசா நிதர்சனா-சாவகச்சேரி இந்து, கு.டயானி- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

***மேற் பிரிவு:*** யோகேஸ்வரன் கஜேந்தினி- மீசாலை வீரசிங்கம் ம.வி, அ.தர்மாலினி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கோ.மேனகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**கவிதை**

***கீழ்ப் பிரிவு:*** த.அருட்பிரியா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, த.துஷ்யந்தி- கச்சாய் அ.த.க.பாடசாலை, து.குமுதா- கச்சாய் அ.த.க.பாடசாலை.

***மத்திய பிரிவு:*** ம.அன்பரசி-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, இ.கோகுலப்பிரியா-இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி, ந.நிரோசனா-கச்சாய் அ.த.க.பாடசாலை.

***மேற் பிரிவு:*** கு.தர்மேந்திரன்- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, கு.நித்தியா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ஜெ.சர்மிளா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (202-207)

## நெடுந்தீவு ம.வி.யில் இணையத்தள வசதி

நல்லூர்,நவ.17

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இணையத்தள வசதிகள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தெரிவித்தார். (202-111)



வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

விழாவை ஒட்டி நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்றவருக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பரிசில் வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம். இலக்கியத்துக்கான பரிசை திருமதி இ.சடாட்சரதேவி, [illegible] பரிசை கி.தேவராசவும் மரச் சிற்பத்துக்கான பரிசிசை வே.கார்த்திகேசும் யாழ்.அரச அதிபர் கே.கணேசிடமிருந்து பெற்றுக் கொள்வதை அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள் :சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு சிறந்ததோர் அனுபவம் நல்ல நூல்களைத் தேடி வாசித்தல்



**நேற்றைய உதயனில் 'வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் எதிர்காலத்தை சுபீட்சமாக மாற்றலாம்' என்ற தலைப்பில் வெளியாகிய கட்டுரையின் இறுதிப் பகுதி இது.**

### யாழ்ப்பாணக் குடாநாடும் வாசிப்புப் பஞ்சமும்

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11ஆம் திகதி A-9பாதை மூடப்பட்டதன் பின்னரான சூழலில் உணவுக்கு எவ்வாறு பஞ்சம் ஏற்பட்டதோ, அதேபோன்று வாசிப்புக்கும் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. ஒருநாளில் சில மணித்தியாலங்கள் தவிர மிகுதிநேரம் முழுவதும் ஊரடங்கு அமுலில் இருந்தது. மக்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர். மின்சாரம் இல்லாத காரணத்தால் தொலைக்காட்சிப் பெட்டி, மற்றும் வானொலிப்பெட்டி என்பன இயக்கமின்றிக் கிடந்தன. பொதுநூலகங்களும் பூட்டியே கிடந்தன. உள்ளூர்ப் பத்திரிகைகள் நான்கு பக்கங்களில், மிகவும் குறைவான பிரதிகளாக வெளிவந்தன. அவற்றை வாங்குவது மிகக் கஸ்டம்; வாங்கினாலும் அவற்றிலுள்ள அச்சடித்த செய்திகள் அனைத்தையும் அரைமணித்தியாலங்களுள் வாசித்து முடித்துவிடலாம். இக்காலப்பகுதியில் வாசிப்புக் கருவிகளான (Reading Materials) பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் நூல்களுக்கு பெருந்தட்டுப்பாடு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புத்தகசாலைகள் தமது பழைய புத்தகங்களை பத்து ரூபா, இருபது ரூபா மற்றும் ஐம்பது ரூபா ஆகிய விலைகளுக்கு விற்றுத் தீர்த்தன. இக்கட்டுரையை வாசித்துக்கொண்டிருக்கும் உங்களுக்கும் இவ் அனுபவம் ஏற்பட்டிருக்கக்கூடும். வாசிப்புத் தொடர்பான ஓர் வரலாற்று நிகழ்ச்சி என்பதால் இதை இங்கு நான் பதிவு செய்துள்ளேன்.

### வாசிப்பும் மாணவர் சமுதாயமும்

நவீன கல்வித் தேவைகளுக்கு ஏற்ப, மாணவர் சமுதாயத்தை நூல்களை வாசிப்பதற்கு சிறுவயதில் இருந்தே பழக்கப்படுத்துவதுடன், சுய கல்வியின் முக்கியத்துவத்திற்கும் வழிகாட்ட வேண்டும். தற்காலத்தில் இலங்கைப் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்த மானது கட்டுருவாக்கத்தை (Constructrivism) அடிப்படையாகக் கொண்டது. இங்கு அறிவானது கற்போனின் அனுபவத்திலிருந்து கட்டியெழுப்பப்படுகின்றது. சிறந்த வாசிப்பினூடாக நல்ல அனுபவத்தை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். தற்கால தேடிக்கண்டறிதலுக் கான அடிப்படை வாசிப்பாகும். பொதுப் பரீட்சைகளில் தேசிய ரீதியில் சாதனை படைத்த யாழ். குடாநாட்டு மாணவர்கள் தமது கல்வி அடைவுக்கு தமது வாசிப்பும் காரணமென தமது பேட்டிகளில் குறிப்பிட்டுள்ளமையை ஏனைய மாணவர்கள் முன்மாதிரியாகக் கொள்ளுதல் வேண்டும்.

தற்போது யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான பாடசாலைகள் நூலகங்களைக் கொண்டுள்ளன. பாடசாலை நூலகங்களுக்குப் பொறுப்பாக ஆசிரிய நூலகர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பாடசாலைகளுக்கு நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளன. பாடசாலைகள் தமது சொந்த நிதியீட்டங்களைக் கொண்டும் நூல்களை கொள்வனவு செய்ய முடியும். பாடசாலை நூலகங்களுக்கு நூல்களைக் கொள்வனவு செய்யும்போது மாணவர்களது பாடத்தேவைகள் மட்டுமன்றி தேடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நூல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதன்மூலம் வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்து புள்ளி விபரங்களைப்பெற உதவுதல், வரைபடங்களைப்பெற உதவுதல், வரலாற்றுக் குறிப்புக்களைப்பெற உதவுதல், பெரியார்களைப் பற்றிய குறிப்புகளைத் தேடிப்பெறக் கூடிய வகையில் உதவுதல், கோயில், புனிதத்தலங்களின் வரலாற்றைப் பெறக் கூடியதான நூல்களைத்தேடி வாங்க வேண்டுமென பேராதனைப் பல்கலைக் கழக சிரேஷ்ட துணைநூலகர் ஆர்.மகேஸ்வரன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

### ஆசிரியர்களும் வாசிப்பும்

வாசிப்பு என்பது அனைவருக்கும் பொதுவானது. வாசிக்கத் தெரிந்த பருவம் தொடக்கம் இறப்புவரை மனிதனின் வாசிப்பு தொடர்ந்து செல்கின்றது. அனைத்துத் தொழில் புரிபவர்களுக்கும் வாசிப்பு இன்றியமையாதது. எனினும் ஆசிரியப் பணிபுரிபவர்களால் வாசிப்பைத் தவிர்க்க முடியாது. ஆசிரியத் தொழிலின் நீடித்தல் மற்றும் நிலைத்திருகைக்கு வாசிப்பு அவசியம். "எந்தவொரு ஆசிரியர் தான் கற்பதை அல்லது வாசித்தலை நிறுத்திக்கொள்கின்றாரோ அக்கணத்திலிருந்து தனது கற்பித்தல் தொழிலையும் இடை நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்பது அடிக்கடி அனைவரும் பயன்படுத்தும் மகுடவாசகமாகும். இங்கு ஆசிரியர்களின் கற்றல் பெரும்பாலும் வாசிப்பினூடாகவே நிகழ்கின்றது.

தற்காலச்சூழலில் கல்விப் புலமையாளர்களும், கல்வி அதிகாரிகளும் கல்வி சார் கட்டுரையாளர்களும், ஆசிரியர்களின் வாசிப்பு தொடர்பான பின்வரும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.


★ பெரும்பாலான ஆசிரியர்களின் வாசிப்பு பெருமளவில் குறைவடைந்துள்ளது.

★ வாசிப்பு மூலம் விடயதானங்களை மாணவர்கள் தேடிப்பெற்றுக்கொள்வதற்கேற்ற முறையில் ஆசிரியர்கள் கற்பிப்பதில்லை.

★ பாடசாலை நூலகங்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான தரமான நூல்களைக் கொண்டிருப்பதில்லை.

★ சில பாடசாலைகள் நல்ல நூல்களைக் கொண்டிருந்தும் அவற்றை ஆசிரியர்கள், மாணவர்கள் வாசிப்பதற்கு பயன்படுத்துவதில்லை.

ஆசிரியர்களின் வாசித்தலை குறைவடையச் செய்தலில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். தற்கால கலைத்திட்டம் ஆசிரியர்களின் வேலைப்பளுவை அதிகரித்துள்ளது. மற்றும் நூலகப் பாவனைக்கான பாடவேளைகள், நேரசூசியில் ஒதுக்கப்படுவதில்லை. குடும்பச் சுமையும் அவர்களின் வாசிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றது. வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பிற்கேற்ப வேதன வேற்றம் வழங்கப்படாமையால், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் நூல்களை அவர்களால் சொந்தமாக வாங்கி வாசிக்க முடியாதுள்ளது.



**ஆனந்தமயில் நித்திலவர்ணன்**
**B.Sc. with Education (Hons), MEd.**
உதவி விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.


ஆசிரியர்களின் வாசிப்பிற்கு குறுக்கே பல்வேறு தடைகள் இருந்தபோதும் ஆசிரியர்கள்தான் சிறந்த எழுத்தாளர்களாக இருக்கின்றார்கள். பத்திரிகை ஆசிரியர்களாக இருக்கின்றனர்; சிறந்த விமர்சகர்களாக இருக்கின்றனர். இதற்கு அவர்களின் சிறந்த வாசிப்பும் தேடலும் தான் காரணமாகும். வாசிப்பை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஓர் ஆசிரியர் காத்திரமான பங்களிப்பைச் செய்ய முடியும். இங்கு தரப்பட்டுள்ள எண்ணக் கருப்படம் (Concept map) வாசிக்கும் சமுதாயத்தில் ஓர் ஆசிரியரின் வகிபாகத்தைக் காட்டுகின்றது.

தகவல்களினாலும் அறிவினாலும் நிரம்பி அந்த அறிவைப் பெறுவதை இலகுவாக்கும் தொடர்பு சாதன வலையமைப்புடன் கூடிய மனித சரித்திரத்தின் அபூர்வமானதொரு யுகத்தில் வாழ்வதற்கு நாம் மிக அதிஷ்டம் செய்தவர்களாவோம். இந்த அறிவைப் பெற்று எமது தனிப்பட்ட வாழ்வை ஒளிமயமான தாக்குவதன் மூலமும் புத்திசாலிகளான சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்புவதன் மூலமும் வெற்றிகரமான தேசம் ஒன்றை யும் மக்களையும் உருவாக்கும் பாரிய பொறுப்புடன் வாசிப்பு மாதத்திற்கான செயற்றிட்டங்கள் நடைபெறுகின்றன. வாசிப்பானது ஒக்ரோபர் மாதத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது வாழ்நாள் முழுவதற்கும் கொண்டு செல்ல வேண்டிய பெறுமதிமிக்கதொரு பழக்கமாகும்.

★★★★★★★

முற்றும்

**வாசிக்கும் சமுதாயத்தை Reading society ஒன்றை உருவாக்கலில் ஓர் ஆசிரியரின் வகிபங்கு**




---

# அடுத்த மாதத்தில் எரிபொருள் விலைகள் மீண்டும் குறைக்கப்படும் என்கிறார் பௌசி

கொழும்பு, நவ.17

எரிபொருள்களின் விலை அடுத்த மாதத்தில் மீண்டும் குறைக்கப்படும் என எரிபொருள் மற்றும் கனியவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்ஹெட்டி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இவ்வாறு கூறினார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் குறைந்து செல்கின்ற நிலையில், அதன் பலனை மக்களுக்கு வழங்குவதற்கான எண்ணம் இல்லையா என நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்ஹெட்டி கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, உலகச் சந்தையில் விலை அதிகமாக இருக்கும்போது கொள்வனவு செய்த எரிபொருள் தற்போது கையிருப்பில் இருப்பதனால், அதன் விலையை குறைக்க முடியாதுள்ளது. குறைந்த விலையில் எரிபொருளை கொள்வனவு செய்ததன் பின்னர், அதன் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## வீடமைப்புத்திட்டப் பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் சமுர்த்தி - 'கமநெகும' கிராம சேவகர் பிரிவுகளாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜே/65, ஜே/70, ஜே/74, ஜே/84, ஜே/87 பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவான ரூபா 3 ஆயிரம் சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் வருமாறு:-

வஸ்தியாம்பிள்ளை யூப்பிறேசியா (பாசையூர்), கே.இளங்கோ (குருநகர்), தேவசகாயம் நிர்மலா (இராசாவின் தோட்டம்), செபஸ்ரியாம்பிள்ளை மரியநாயகி (நாவாந்துறை தெற்கு), யோசெப் பத்மநாதன் (நாவாந்துறை வடக்கு), சண்முகம் யோகராசா (சோனகத் தெரு). (202)

## சோமவார பூஜை

யாழ்ப்பாணம், நவ.17

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவார சிறப்புப் பூஜைகள் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (202)

## சங்கானையில் நடமாடும் சேவை

சங்கானை, நவ.17

வலி.மேற்கு, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் காலம் கடந்த பதிவுகளுக்கான நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் சேவையில் இதுவரை காலமும் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாதோர் தகுந்த ஆதாரங்களுடன் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202-29)

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக சேலத்தில் அமைதிப் பேரணியும், பொதுக் கூட்டமும்

## பெருந்திரளான மக்கள் உணர்வுபூர்வப் பங்கேற்பு

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கக் கோரியும், இலங்கையில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தியும் தமிழகத்தின் சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்காட்டில் பொதுமக்கள் சார்பாக அமைதி ஊர்வலமும், பொது கூட்டமும் கடந்த வெள்ளிக்கிமை நடைபெற்றன.

ஈழத்தில் பாதிக்கப்படும் இரத்த உறவுகளான தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டியும், அவர்களுக்கு மருத்துவ வசதியும், உணவு வசதியும், இருப்பிட வசதியும் செய்து தருவதோடு இலங்கை அரசு உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டியும், இதற்கான துரித நடவடிக்கையை மத்திய, மாநில அரசுகள் எடுக்க வற்புறுத்தியும், அமைதி ஊர்வலம் நடை பெற்றது. இதில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.

'கொல்லாதே! கொல்லாதே! ஈழத் தமிழர்களைக் கொல்லாதே!'

'சிங்கள அரசே! அப்பாவித் தமிழர்கள் மீது குண்டு மழை பொழியாதே!'

'எங்கள் இரத்தம்! எங்கள் இரத்தம்! ஈழத் தமிழர் எங்கள் இரத்தம்!'

என்பன போன்ற பதாகைகளை அமைதிப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்ட பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பெருந்திரளானோர் ஏந்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (04)

## என்ன விலை கொடுத்தும்......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே பாதுகாப்புப் படைகள் இன்னும் எவ்வளவோ செய்தாகவேண்டியிருக்கும்.

### நன்கொடைகளை அரசு எதிர்பார்க்கிறது

இந்த இராணுவ நடவடிக்கையின் உண்மையான வீரர்களான காலாட்படையணி வீரர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். குடிக்கும் தண்ணீருக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் பெருமளவில் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட வேண்டியுள்ளது. முன்னரங்குகளில் நிற்பவர்களுக்குச் சூடாக உணவு கிடைப்பதென்பது பெருங்கஷ்டம். சிலசமயங்களில் உணவுகள் வந்து சேரும்போது ஊ[illegible]ப் போய்விடுகின்றன. இது விடயத்தில் அதிகாரிகள் கவனம் எடுக்கவில்லையென்று கூறமுடியாது - எதிர்த் தரப்பின் தலையீடு இல்லாமல் அவை உரியவர்களுக்குக் கொண்டு செல்லப்படவேண்டும் என்பதும் அவர்களின் கவலையாகவுள்ளது. குளிப்பதென்பது தண்ணீர் தாராளமாகக் கிடைத்தால் மட்டுமே சாத்தியம், அதுவும் ஒருவ[illegible]ம் அல்லது கூட நாள்கள் எடுக்கும் - உறவினர்களுடனான தொடர்பும் பல நாள்களுக்குக் கிடைக்கமாட்டாது. காயமடைந்தால் கரடுமுரடான பாதைகளில் டிராக்டர் பயணம் மேற்கொண்டாக வேண்டும். சிகிச்சை பெறும் இடத்துக்குச் செல்வதற்கு அண்மைக்கால மழையின்போது கடும்மழையை அவர்கள் எதிர்த்து நிற்கவேண்டியேற்பட்டது. ஈர உடுப்புகள், சீருடைகளுடன் இருப்பது மட்டுமல்ல நனைந்த கால் உறைகள் பாதணிகளுடனும் இருக்க வேண்டிய நிலைமை. இதனால் சரும வியாதிகள், சொறி சிரங்குகள் போன்றவற்றுக்கும் ஆளாகிறார்கள்.

இவ்வாறு உபாதைகளுக்குள்ளாகியுள்ள துருப்பினருக்கு உதவ கால்களுக்குப் போடும் மருந்துகள், தெளிப்பான்கள், பௌடர்கள் போன்றவற்றைத் தந்துதவுமாறு அரசு பொதுமக்களைக் கேட்டிருக்கின்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து - இந்திய அணிகளிடையே இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று


பயிற்சியில் மு[illegible] பட்டேல்

இந்தூர், நவ. 17

பீட்டர்சன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

7 ஒருநாள் போட்டிகள் தொடரில் ராஜ்கோட்டில் நடந்த முதல் ஆட்டத்தில் 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 1- 0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மேலும் 2 ஆவது ஒருநாள் போட்டி மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இன்று(திங்கட்கிழமை) நடக்கிறது. இதற்காக இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ராஜ்கோட்டில் இந்திய அணி இங்கிலாந்தைத் துவம்சம் செய்துவிட்டது. யுவராஜ்சிங், ஷேவாக் ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தாலும் சகீர்கானின் அபாரமான பந்துவீச்சாலும் அந்த அணி நிலைகுலைந்து போனது. குறிப்பாக யுவராஜ்சிங் மிகவும் அபாரமாக விளையாடினார்.

இந்தியாவின் இந்த அதிரடி இன்றைய போட்டியிலும் நீடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யூசுப் பதான் மட்டுமே ராஜ்கோட் போட்டியில் சோபிக்கவில்லை. இதனால் அவர் ஒருவேளை மாற்றப்பட வாய்ப்பு இருக்கிறது. இஷாந்த் சர்மா இடம் பெற்றால் ஆர்.பி.சிங் அல்லது யூசுப்பதான் நீக்கப்படலாம்.

முதல் ஒருநாள் போட்டியில் ஏற்பட்ட மோசமான தோல்வியில் இருந்து இங்கிலாந்து அணி இன்னும் மீளவில்லை. சமீபத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்திய அந்த அணி இந்திய மண்ணில் தடுமாறுகிறது. இன்றைய போட்டியில் அந்த அணி வீரர்கள் அனைவரும் முழுத் திறமையை வெளிப்படுத்தி இந்தியாவுக்கு சவால் கொடுக்கும் வகையில் விளையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இன்றைய ஆட்டமும் ரசிகர்களுக்கு விருந்தாக அமையலாம் என்று தெரிகிறது. காலை 9 மணிக்குப் போட்டி தொடங்கும்.


பயிற்சியில் இங்கிலாந்து வீரர் பிளின்ரொப்

இப் போட்டியில் களமிறங்கும் இந்திய அணி விவரம் வருமாறு:-

டோனி (கப்டன்), ஷேவாக், காம்பீர், சுரேஷ், ரெய்னா, யுவராஜ் சிங், யூசுப் பதான், ரோகித் சர்மா, ஹர்பஜன்சிங், சகீர்கான், ஆர்.பி.சிங், முனாப் பட்டேல், இஷாந்த் சர்மா, விரட் கோஹ்லி, ஓஜா, முரளி விஜய்.

இங்கிலாந்து: பீட்டர்சன் (கப்டன்), பிரையர், இயன்பெல், ஷா, பிளின்ரொப் கொலிங் வூட், ரவி போபரா, சமீத் படேல், அண்டர்சன், ஹார்மிசன், ஸ்டுவர்ட் பிராட், அலிஸ்டர் குக், அம்பு ரோஸ், கிரேமி சுவான், லுகேரைட், சைட்பொட்டம்.

இன்றைய ஆட்டம் இரு அணிகளுக்கும் இடையிலான 67 ஆவது போட்டி ஆகும். இதுவரை நடந்த 66 போட்டிகளில் இந்தியா 34 ஆட்டங்களிலும் இங்கிலாந்து 30 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றன. 2 ஆட்டங்கள் முடிவு இல்லை.

## மீண்டும் எழுவார் டிராவிட்!

### கங்குலி நம்பிக்கை.



இந்தியக் கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் ராகுல் டிராவிட் மீண்டும் சிறப்பாக ஆடத்தொடங்குவார் என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி கூறியுள்ளார்.

கங்குலி சமீபத்தில் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார்.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய கங்குலி, ஓட்டம் குவிக்க முடியாமல் திணறி வரும் டிராவிட் அந்த நிலையிலிருந்து மீண்டு வந்து சிறப்பாக ஆடுவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டிராவிட் தனது ஆட்டத்தில் உள்ள குறைகளைச் சரிசெய்துகொண்டு மீண்டும் பிரகாசிப்பார் என்றும் கங்குலி கூறியுள்ளார். 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆடிவரும் டிராவிட்டின் ஆட்டம் குறித்து சந்தேகப்படத் தேவையில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஹைடனுக்கு கண்டனம்!



மு[illegible], [illegible] 17

இந்[illegible]வை மூன்றாம் உலக நாடு என்று அவுஸ்திரேலிய வீரர் [illegible]த்யூ ஹை[illegible]ன் கூறியமைக்கு இந்திய கிரிக்கெட் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 4 ஆவது டெஸ்டின் போது அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் பகுதிநேரப் பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தியமை விமர்சனத்திற்கு உள்ளாகியது.

பொண்டிங்கின் அந்த முடிவுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்த ஹைடன், இந்தியா போன்ற 3 ஆம் உலக நாட்டில் ஆடும்போது பல இடையூறுகள் ஏற்பட்டு நேரம் விரையம் ஆவதாகக் கூறியிருந்தார்.

இதற்கு கிரிக்கெட் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

தாமதமாகப் பந்து வீசுவதை வழக்கமாகக் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி அதற்கு இந்தியாவைக் குறை சொல்வது தேவையில்லாதது என்று கிரிக்கெட் நிதிக்குழுத் தலைவர் ராஜேஷ் சுக்லா கூறியுள்ளார்.

# கங்குலியின் வாரிசு யுவராஜ் சிங்; இங்கிலாந்து ஊடகங்கள் புகழாரம்



லண்டன், நவ. 17

இந்தியதுடுப்பாட்ட வரிசையில் கங்குலியின் வாரிசு யுவராஜ் தான் என்பதை நிரூபித்துவிட்டார் என்று இங்கிலாந்து பத்திரிகைகள் புகழ்ந்துள்ளன. இந்தியாவுடன் ராஜ்கோட்டில் நடந்த முதல் ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து அணி 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்திய வீரர் யுவராஜ் சிங் அதிரடியாக விளையாடி, ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்கள் விளாசினார். அவரது அபாரமான ஆட்டத்தை இங்கிலாந்து பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டியுள்ளன.

டெய்லி மெயில் :- காயம் அடைந்த நிலையில் 'பை ரன்னர்' வைத்துக் கொண்டு விளையாடிய யுவராஜ், இங்கிலாந்து பந்துவீச்சை சின்னாபின்னமாக்கிவிட்டார். அவர் முழு உடல் தகுதியுடன் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

நல்ல வேளையாக இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் அத்தகைய தண்டனையில் இருந்து தப்பிவிட்டனர்.

டெய்லி டெலிகிராப் :- பீட்டர்சன் தலைவராகப் பதவியேற்ற பிறகு விளையாடிய முதல் தொடரில் அபாரமாகச் செயற்பட்டார். பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி நம்பிக்கை அளித்தார். ஆனால், தலைவர் பதவி எத்தனை நெருக்கடியானது என்பதை, இந்திய அணியிடம் ராஜ்கோட்டில் அடைந்த தோல்வி அவருக்கு உணர்த்திவிட்டது. விளையாடியமை மேற்கிந்தியத் தீவின் முன்னாள் நட்சத்திரம் கேரி சோபர்ஸை நினைவுபடுத்துகிறது. சோபர்ஸ், கிளைவ்லொயிட், லாரா ஆகியோரின் கலவையாக யுவராஜ் சிங்கின் ஆட்டம் உள்ளது.


பந்து வரும் திசையில் மட்டையை ஒரு சுழற்று சுழற்ற வேண்டும். ராஜ்கோட் போட்டியில் அவர் செய்தது அவ்வளவுதான். துடுப்பாட்டம் அவருக்கு அத்தனை எளிதாக இருந்தது. பிளின்ரொப்பால் கூட அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

தி கார்டியன் :- ஒருநாள் போட்டிகளில் இது மகத்தான இன்னிங்ஸ் என்பதில் சந்தேகமே இல்லை. முதுகு வலியோடு அவர் இப்படி விளையாடினார் என்பதை நம்பவே முடியவில்லை. கங்குலி ஓய்வுபெற்றதால் இந்தியத் துடுப்பாட்ட நடுவரிசையில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பத் தகுதியான வீரர் தான்தான் என்பதை யுவராஜ் நிரூபித்துள்ளார். கங்குலியின் வாரிசு அவர் என்பதில் சந்தேகமே இல்லை. புதிய தலைவர் கெவின் பீட்டர்சனின் 'தேன் நிலவு' முடிந்துவிட்டது.

இப்படி அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




## இருபதாவது ஆண்டில் சச்சின்!




சச்சின் தனது கிரிக்கெட் வாழ்க்கையின் 20 ஆவது ஆண்டில் நேற்று முன்தினம் காலடி எடுத்து வைத்தார். இதன் மூலம் அதிக காலம் கிரிக்கெட் விளையாடிய இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். கிரிக்கெட் உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர்.

1989 நவம்பர் 15 இல் கராச்சியில் அவர் தனது முதல் சர்வதேசப் போட்டியில் களமிறங்கினார். பின்னர் தனது அபார ஆட்டத்தால் உலகின் 'நம்பர் - 1' துடுப்பாட்ட வீரர் எனப் பலராலும் பாராட்டப்பட்டார். 19 ஆண்டுகளாக அசைக்கமுடியாத வீரராகத் திகழ்ந்த இவர் நேற்றுமுன்தினம் தனது 20 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைத்தார்.

இதன்மூலம் அதிக ஆண்டுகள் இந்திய அணிக்காக விளையாடிவரும் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். முன்னதாக இந்திய வீரர் லாலா அமர்நாத் சரியாக 19 ஆண்டுகள் விளையாடியமையே அதிகமாக இருந்தது. இவர் 1933, டிசெம்பர் 15 முதல் 1952 டிசெம்பர் 15 வரை இந்திய அணிக்காக சர்வதேசப் போட்டியில் அவர் விளையாடினார். சர்வதேச அளவில் அதிக நாட்கள் கிரிக்கெட் விளையாடியவர் என்ற பெருமையை இங்கிலாந்தின் வில்பிரட் ரோட்ஸ் பெற்றுள்ளார். இவர் 1899 ஜூன் 1 முதல் 1930 ஏப்ரல் 12 வரை 30 ஆண்டுகளும் 315 நாட்களும் விளையாடியுள்ளார்.

## இன்றைய போட்டியில் இந்தியாவுக்குப் பதிலடி

### இங்கிலாந்து அணித்தலைவர்



இந்திய அணிக்கு2ஆவது ஒருநாள் போட்டியில்தமது அணி பதிலடி கொடுக்கும் என்று இங்கிலாந்து அணித் தலைவர் கெவின் பீட்டர்சன் கூறியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் ஒருநாள் போட்டி ராஜ் கோட்டில் நடைபெற்றது. இதில் இந்தியா 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெறறிபெற்றது.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய இங்கிலாந்து அணித் தலைவர் கெவின் பீட்டர்சன், அடுத்த போட்டியில் இந்தியாவுக்குத் தாம் பதிலடி கொடுப்பார் எனக் கூறியுள்ளார்.

ஷேவாக், காம்பீர் ஆகியோர் சிறப்பாக ஆடினர் எனக் கூறிய அவர் யுவராஜ் சிங்கின் அதிரடிச்சதம் இங்கிலாந்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தார்.

## பெடரரின் முதல் எதிரி நடால்!




ஷாங்காய், நவ. 17

சமீபத்திய போட்டிகளில் இங்கிலாந்தின் அண்டி முர்ரேவிடம் தோற்றிருந்தாலும், ஸ்பெயினின் நடால்தான் தன்னுடைய முதல் எதிரி என்று நட்சத்திர டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) கூறினார்.

சீனாவில் நடக்கும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் அண்டி முர்ரே உடன் பெடரர் நேற்று முன்தினம் மோதினார். மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில் முர்ரே 4 - 6, 7 - 6 (7 - 3), 7 - 5 என்ற செட்கணக்கில் போராடி வென்று அரை இறுதிக்கு முன்னேறினார்.

முர்ரே உடன் இதுவரை 6 முறை மோதியுள்ள பெடரர், அவற்றில் 4 போட்டிகளில் தோற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமீபத்திய போட்டிகளில் முர்ரேவிடம் தோற்றிருந்தாலும், நம்பர் 1 வீரர் நடால்தான் தனக்கு முதல் எதிரி என்று பெடரர் கூறினார்.




இதுகுறித்து அவர் கூறியதாவது :-

சமீபத்திய போட்டிகளில் முர்ரே வென்றிருந்தாலும், கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் என்று வரும்போது நடாலுக்கும் எனக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது. பெரிய போட்டிகளில் அவர்தான் எனது முதல் எதிரி. இன்னும் சில கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிகளில் நாங்கள் இருவரும் மோதுவோம் என எதிர்பார்க்கிறேன். முதுகு வலி மற்றும் வயிற்று வலியுடன் ஷாங்காய் போட்டியில் விளையாடினாலும், முர்ரேவுக்கு கடைசிவரை நெருக்கடி கொடுத்தமை திருப்தியாக உள்ளது. இவ்வாறு பெடரர் கூறினார்.



சீனாவில் நடக்கும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் ரஷ்ய வீரர் நிகோலே டேவிடென்கோ வெற்றி பெற்றார். நேற்று நடந்த இப் போட்டியில் அவர் இங்கிலாந்தின் அண்டி முர்ரேவை 7 - 5, 6 - 2 என்ற நேர் செட்களில் வென்று இறுதிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சுடன் டேவிடென்கோ மோதுகிறார். பந்தை அபாரமாகத் திருப்பி அனுப்புகிறார் டேவிடென்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழினப் படுகொலையை ஐ.நாவுக்கு எடுத்துச் செல்லவேண்டும்!

## மத்திய அரசை வலியுறுத்துகிறார் ராமதாஸ்



சென்னை, நவ.17

இலங்கையில் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழினப் படுகொலை குறித்து உடனடியாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு மத்திய அரசு எடுத்துச் செல்ல வேண்டும்.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில், தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள அண்டை நாடு என்ற முறையில் இந்தியா போர்ப்படை தலையீடு செய்வதற்கு அனைத்து முகாந்திரமும் இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு திருப்பு முனையை எட்டியிருக்கிறது. அங்கு எழுந்துள்ள மோதல்களும், நிகழ்வுகளும் தீவிரவாதச் செயற்பாடுகளா? அல்லது அங்கு நடப்பது உள்நாட்டுப் போரா என்பதில் அண்டை நாடான இந்தியா திடமான முடிவுக்கு வந்தாக வேண்டிய கட்டத்தை நோக்கி அது நகர்ந்திருக்கிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகளையும், ஈழத் தமிழர்களையும் ஒருசேர அழிப்பதற்குத் தான் சண்டையை மஹிந்த ராஜபக்ஷ நடத்திக் கொண்டிருக்கிறார். அதைத் தொடரவும் விரும்புகிறார். அவரது இந்த இனப் படுகொலைச் சண்டை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கு அவர் இணங்காவிட்டால் மாற்று வழிகளைப் பரிசீலிப்போம் என அறிவுறுத்த வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி கூறியிருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

இலங்கையில் இப்போது நடந்துகொண்டிருப்பதைப் போன்று இனப்படுகொலை உலகில் எங்கேயாவது நடந்தால், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிமுறைகள் என்ன? அண்டை நாடுகளின் கடமை என்ன என்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை, 'தலையீடு மற்றும் நாட்டின் இறையாண்மை குறித்த பன்னாட்டு ஆணையம்' என்ற அமைப்பை உருவாக்கி கொள்கை விளக்கப் பிரகடனத்தை வகுத்துத் தந்திருக்கிறது.

அரசின் புறக்கணிப்புக் காரணமாக அல்லது அரசு செயற்பட இயலாமை காரணமாக நிலைமை மோசமடைந்து இனப்படுகொலை செய்யும் நோக்கில் பெருமளவு உயிரிழப்பு ஏற்படும் போதும் அல்லது ஏற்படலாம் என ஐயப்படும் போதும், கொல்லுதல், கட்டாயமாகக் கடத்தி வெளியேற்றுதல், பாலியல் கொடுமை ஆகியவற்றின் மூலமாக பெருமளவில் இன அழிப்பு செய்யப்படும்போதும் அல்லது செய்யப்படலாம் என ஐயப்படும்போதும் போர்ப்படைத் தலையீடு அவ்சியமானது என்றும் அதில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ நடத்திக் கொண்டிருக்கும் இனப்படுகொலை இத்தகைய போர்ப்படை தலையீட்டிற்கு உகந்ததுதான் என்பதில் சந்தேகமே இல்லை. தாக்கத்திற்கு ஆளாகியுள்ள அண்டை நாடு என்ற முறையில் இந்தியா போர்ப்படை தலையீடு செய்வதற்கு அனைத்து முகாந்திரமும் இருக்கிறது. ஆனாலும், போர்ப்படைத் தலையீடு செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. குறைந்தபட்சம் ஐ.நா. பாதுகாப்புகவுன்சிலுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

"உலகில் மதிப்பு, மரியாதை, மானம் மாத்திரமல்லாது, உயிர் மற்றும் உடைமைகளும் கூட கேவலமாகக் கருதப்படுகின்ற ஒரு சூழ்நிலை தமிழனுக்கு மட்டும்தான் இருக்கிறது; தமிழனாக இருப்பதால்தானே இந்த நிலைமை என்று வருந்த வேண்டிய ஒரு பெரும் சோகம் கருமேகமாக நம்மை கவ்விக் கொண்டிக்கிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை" என்று தமிழக முதல்வர் கருணாநிதி அண்மையில் கூறியது வெறும் வார்த்தைகளல்ல. தமிழர்களின் உள்ளக் குமுறல். தமிழர்கள் என்பதற்காக அல்ல, மனிதாபிமான அடிப்படையிலாவது இலங்கை இனச் சிக்கலை, அங்கு நடந்து கொண்டிருக்கும் இன அழிப்பை ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழினத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிக்கொண்டு இருக்கிறது. எண்ணி, எண்ணி ஏங்குகிறேன், பெருமூச்சு விடுகிறேன். மனம் ஒரு நிலையில் இல்லை, உறங்க முடியாமல் தவிக்கிறேன் என்று முதல்வர் கருணாநிதி சுட்டிக்காட்டிய நிலையில்தான் இன்றைக்கு ஒவ்வொரு தமிழர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்திய அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எனவே, மனிதாபிமான அடிப்படையில், இலங்கையில் நடக்குக் கொடுமைக்கு முடிவு காண இந்திய அரசு ஒரு கனமும் தயங்காமல் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது இங்குள்ள 7 கோடி தமிழர்களின் ஒருமித்த கோரிக்கையாகும். தமிழர்களும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு இதற்காகக் குரல் கொடுக்க வேண்டும் - செயல்பட வேண்டும் - என்றுள்ளது.

# புட்டபர்த்தியில் மூன்று இலங்கைத் தமிழர் கைது

புட்டபர்த்தி, நவ. 17

புட்டபர்த்தி சத்யசாயி பாபா ஆச்சிரமம் அமைந்துள்ள பகுதியில், விடுதி ஒன்றில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புட்டபர்த்தி நகரில், சத்யசாயி பாபாவின் 83 ஆவது பிறந்த நாளையொட்டி, சனி முதல் திங்கள் வரை பிரமாண்டமான யாகம் நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தி சாயிபாபா ஆச்சிரமம் அமைந்துள்ள பகுதியில் குவிந்துள்ளனர்.

புட்டபர்த்தி நகரிலும், ஆச்சிரமப் பகுதிகளிலும் தங்கியிருக்கும் வெளிநாட்டுக்காரர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இப்பகுதியில், 'சப்தகிரி பாரடைஸ்' என்ற விடுதியில் பொலிஸார் சோதனை நடத்தியதில், 301 எண் கொண்ட அறையில் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் பூஜிவன் புவனேந்திரன் (வயது - 21), சுதா தவராஜா (வயது - 19), சிந்துஜா பாலசிங்கம் (வயது 20) ஆகிய மூவர் தங்கியிருந்தனர்.

இவர்களிடம் விசாரணை நடத்தியதில், இந்தியாவில் தங்கியிருப்பதற்கான விசா முடிவடைந்து விட்டது எனத் தெரியவந்தது.

இதையடுத்து, இலங்கைத் தமிழர்கள் மூவரையும் புட்டபர்த்திப் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண கருணாநிதி டில்லி விரைய வேண்டும்

## இந்தியக் கம்யூ. வலியுறுத்து



அரக்கோணம், நவ.17

இலங்கைப் பிரச்சினையைத் தீர்வுக்கு கொண்டுவர முதல்வர் கருணாநிதி டில்லி செல்ல வேண்டும். அவர் சென்னையில் இருந்து பேசுவது அர்த்தமற்றது - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி. ராஜா வலியுறுத்தியுள்ளார்.

அரக்கோணத்தை அடுத்த சித்தேரியில் ஏலகிரி எக்ஸ்பிரஸ் ரயில் நிலையத் தொடக்க விழாவுக்கு வந்தபோது செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

முதல்வர் கருணாநிதி மத்திய அரசில் முக்கிய பங்கு வகிக்கிறார். அவர் இலங்கைப் பிரச்சினையைச் சென்னையில் இருந்து கொண்டு பேசுவது வீண்.

இதுதொடர்பாக அவர் டில்லி சென்று பேசியிருந்தால் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுத்திருக்கும். அவரது தீவிரமில்லாத நிலையைக் கண்டு மத்திய அரசும் இலங்கைப் பிரச்சினையில் தீவிரம் காட்டாமல் உள்ளது.

தமிழர்களுக்குப் பாதுகாப்பு தருவோம் என்று மஹிந்த ராஜபக்ஷ பேசுவது நம்பமுடியாதது. அவரது பேச்சை பிரதமர் மன்மோகன்சிங் கேட்கிறார். அவர் தமிழர்கள் நிலையை கருத்தில் கொள்ளவில்லை. இனியாவது கருணாநிதி இப்பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக டில்லி செல்ல வேண்டும். தமிழக அரசியல் தலைவர்களும் டில்லி சென்று பிரச்சினைக்கு தீர்வு காண தீவிரம் காட்ட வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

சென்னை, நவ.17

இந்திய அரசு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தக் கோரியும், இலங்கை அரசு போரை நிறுத்தக் கோரியும் தமிழகத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்களும் மாணவர்களும் இணைந்து கவனயீர்ப்பு நிகழ்வினை நடத்தவுள்ளனர்.

இக்கவனயீர்ப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் நடிகர்களான சூர்யா, பிரகாஸ்ராஜ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

"ஓரின மக்கள் பிணக்குவியலாகும் முன், இலங்கை உலகின் மிகப்பெரிய கல்லறையாகும் முன் கரம் சேர்ப்போம் இளைஞர்களே!" என்று நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள தகவல் தொழில்நுட்பவியலாளர்களும் மாணவர்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இலங்கை அகதிகளை ஏற்றி வந்த இராமேஸ்வரம் மீனவர்கள் கைது!

இராமேஸ்வரம், நவ. 17

இலங்கை அகதிகளைப் படகில் ஏற்றி வந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மூன்று பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 7 அகதிகள் கடந்த 9 ஆம் திகதி இராமேஸ்வரம் வந்தனர். பொலிஸாரின் விசாரணையில் பூநேரி கடற்கரையிலிருந்து இலங்கைப் படகில் வந்து நடுக்கடலிலிருந்து இராமேஸ்வரம் மீனவர்களின் படகில் வந்தோம் என அகதிகள் தெரிவித்தனர்.

அதன்படி சின்னையா (வயது 35), முருகேசன் (வயது - 33), வேல்பாண்டி (வயது - 40) ஆகிய மூவரையும் கைது செய்த பொலிஸார் தலைமறைவான மீனவர் லோகு (வயது - 25) என்பவரைத் தேடி வருகின்றனர்.



# இலங்கையில் அப்பாவித் தமிழர்களை சித்திரவதை செய்கின்றது இராணுவம்

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு



இராமேஸ்வரம், நவ.17

இலங்கை இராணுவத்தினர் தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்து வருகின்றனர் - புலிகளைப் பிடிப்பதற்காக தமிழர்களைக் கொடுமைப்படுத்துகின்றனர் - என்று இராமேஸ்வரம் வந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடந்து வரும் சண்டை காரணமாக இராமேஸ்வரத்திற்கு தினமும் ஏராளமானோர் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர்.

இந்தநிலையில் கடந்த வெள்ளியிரவு இலங்கை தலைமன்னார் கடற்கரையிலிருந்து ஒரு பிளாஸ்டிக் படகில் 11 குடும்பத்தை சேர்ந்த 11 ஆண்கள், 7 பெண்கள், 5 ஆண் குழந்தைகள், 6 பெண் குழந்தைகள் என மொத்தம் 29 பேர் தனுஷ்கோடி அரிச்சல்முனைக் கடற்கரையில் வந்திறங்கினர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் காலை தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர். அங்கு கியூப் பிரிவுப் பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர் அவர்கள் அனைவரும் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் அகதியாக வந்த சந்திரகுமார் (வயது - 28) கூறியவை வருமாறு-

இலங்கையில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் வசிந்து வந்தோம். அங்கு இராணுவத்தின் கெடுபிடி அதிகமாக உள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பு எங்கள் பகுதியிலுள்ள 103 குடும்பங்களை இலங்கை இராணுவத்தினர் 100க்கும் மேற்பட்டோர் சுற்றிவளைத்து அங்குள்ள ஒரு பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு விடுதலைப் புலிகளை பார்த்தீர்களா?, அவர்களுக்கு உதவி செய்தீர்களா என்று கேட்டு சித்திரவதை செய்தனர்.

மேலும் தமிழ் இளைஞர்களை இலங்கை இராணுவத்தில் சேரும்படி கட்டாயப்படுத்துகின்றனர். விடுதலைப் புலிகளை பற்றிய தகவல்களை இராணுவத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், விடுதலைப் புலிகளுக்கு உதவுபவர்களை அடையாளம் காட்ட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர். இராணுவத்தில் சேர்ந்தால் மாதம் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை சம்பளம் தருகிறோம் எனவும், சேர மறுத்தால் சுட்டுக் கொன்று விடுவோம் என்றும் மிரட்டுகின்றனர். இவ்வாறு மிரட்டி பல இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துள்ளனர். இதனால் [illegible] பயந்து குடும்பத்தோடு இங்கு அகதியாக வந்து விட்டோம் - என்றார்.

# இந்தியா இனி எந்தவொரு கிரகத்துக்கும் விண்கலத்தை அனுப்பமுடியும் — மாதவன் நாயர்

பெங்களூர், நவ. 17

சந்திரனில் வெற்றிகரமாக இந்திய விண்கலம் 'சந்திரயான்-1' தடம் பதித்ததன் மூலம் இனி எந்தக் கிரகத்துக்கும் நாம் விண்கலத்தை அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது - என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலைய (இஸ்ரோ) தலைவர் ஜி. மாதவன் நாயர் தெரிவித்துள்ளார்

இதுகுறித்து செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு-

'சந்திரயான்-1' விண்கலத்திலிருந்து 'மூன் இம்பாக்ட் புரோப்' (எம்.ஐ.பி.) ஆய்வுக்கலம் நவம்பர் 14ஆம் திகதி இரவு 8.6 மணிக்கு புறப்பட்டு, இரவு 8.31 மணிக்கு சந்திரனில் தடம் பதித்தது.

இது மகத்தான சாதனையாகும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் திறமையை உலக நாடுகளுக்கு இந்த நிகழ்ச்சி பறைசாற்றியுள்ளது. [illegible] எதிர்காலத்தில் இது போன்ற [illegible]ங்களைச் செயற்படுத்த ஊக்கம் அளிப்பதோடு, இந்திய விண்வெளித் திறனை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது

இஸ்ரோவுக்கு உண்மையிலேயே இது பெரிய ஊக்கத்தை அளிக்கும் சம்பவம். இதன்மூலம் இனி வேறு எந்தக் கிரகத்துக்கும் விண்கலத்தை அனுப்ப முடியும் என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்தியுள்ளது.

இப்பெரிய சாதனையை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன்.

தற்போது சந்திரனில் இருந்து 100 கி.மீ தூரத்தில் சந்திரயான்-1 சுற்றிவந்து கொண்டிருக்கிறது. இது பெரிய சாதனை என்றால், சந்திரயானில் இருந்து திட்டமிட்டப்படி பிரிந்து சந்திரனில் கால் பதித்த ஆய்வுக்கலம் நமது தேசியக் கொடியை சந்திரனில் பதித்துள்ளது மிகப்பெரிய சாதனையாகும்.

இதைத் தொடர்ந்து, 'சந்திரயான்-2' விண்கலம் தயாரிக்கும் பணியில் இஸ்ரோ ஈடுபடும். சந்திரயான் 1க்கு இயக்குநராக இருந்த மயில்சாமி அண்ணாதுரையே சந்திரயான் 2க்கும் இயக்குநராக இருப்பார் - என்றார் மாதவன் நாயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறுகோடி இந்தியர்களின் தன்மானத்திற்கு சவால் விடுத்துள்ளார் இலங்கை ஜனாதிபதி

## வைகோ கடும் சீற்றம்



சென்னை, நவ.17

சுதந்திர இந்தியாவின் வரலாற்றி லேயே இந்திய அரசுக்கு என்றுமே ஏற்படாத அவமானம் ஒன்று இப்போது நேர்ந்து விட்டது. இலங்கைத் தீவில், ஈழத்தமிழ் இனத்தைக் கருவறுக்க, கொடிய இராணுவத் தாக்குதலை நடத்திவரும் சிங்கள அரசின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தியத் தலைநகரில் நடந்துகொண்ட விதமும், ஆணவத்தோடும், திமிரோடும் இலங்கையில் போர்நிறுத்தம் செய்யமாட்டோம்; இராணுவத் தாக்குதலைத் தீவிரப்படுத்துவோம்; விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும் வரை, போரை நிறுத்தப் போவதே இல்லை என்று, கொக்கரித்து விட்டுச் சென்றுள்ளார்.

- இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு-

இலங்கையில் போர்நிறுத்தம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்துள்ள நிலையில் இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்வதற்கு இந்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட 48 மணி நேரத்துக்குள் இலங்கையின் அரச தலைவர் இவ்வளவு மமதையோடு பேசியது, தமிழ்நாட்டின் ஏழு கோடி மக்களுக்கு மட்டும் அல்ல, நூறு கோடி இந்தியர்களின் தன்மானத்துக்கு, சுயமரியாதைக்கு விடப்பட்டு உள்ள சவால் ஆகும்.

இவ்வளவு துணிச்சலாக ராஜபக்ஷ பேசியதற்கு, இந்தியாவின் மன்மோகன்சிங் அரசுதான் காரணம் ஆகும். கடந்த நான்கு ஆண்டு காலமாகவே இலங்கை அரசுக்கு எல்லா விதத்திலும் இராணுவ உதவிகள் அளித்தும், ஆயுதங்கள், ராடர்களை வழங்கியும் 2 ஆயிரம் கோடி ரூபாய் வர வட்டி இல்லாக் கடன் கொடுத்தும், இலங்கை விமானிகள், இராணுவச் சிப்பாய்களுக்கு இந்தியாவில் பயிற்சி கொடுத்தும் வந்தது மத்திய அரசே ஆகும்.

### தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை பின்னால் இருந்து இயக்கியது இந்திய அரசே!

இதுமட்டுமன்றி இந்திய - இலங்கை கடற்படை தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் செய்வதும், இந்திய இறையாண்மைக்கே இழுக்கு ஏற்படுத்தும் வகையில், இந்தியக் கடல் எல்லையில் இலங்கைக் கடற்படை கண்ணிவெடிகளைப் போட அனுமதித்தும், ஐக்கிய நாடுகள் சபையில், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து, சுவிற்ஸர்லாந்தும், நியூஸிலாந்து ஆகிய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை இலங்கை அரசோடு சேர்ந்து கொண்டு எதிர்த்துக் குரல் கொடுத்ததும் மன்மோகன் சிங் அரசே.

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் தொடர்ந்து இந்திய இராணுவத் தளபதிகளை கொழும்புக்கு அனுப்பி, இலங்கை அரசின் இராணுவத்துக்கு ஆலோசனைகளை வழங்கியும், பலாலி விமானத் தளத்தை இந்திய அரசின் செலவில் புதுப்பித்துக் கொடுத்தும், இலங்கை விமானப் படைக்கு ராடர்களை கொடுத்தும், இந்திய நிபுணர்களை இலங்கைக்கு அனுப்பி சிங்கள அரசு நடத்தும் இராணுவத் தாக்குதல்களை, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை முழுக்க முழுக்கப் பின்னாலே இருந்து இயக்கி வந்தது இந்திய அரசுதான் என்ற மறுக்க இயலாத இந்த உண்மை இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

இலங்கைத் தீவில், மூன்று லட்சம் தமிழ் மக்கள் இராணுவத் தாக்குதலுக்கும் குண்டு வீச்சுக்கும் நடுவில், மரண பீதியில் துடிக்கின்றனர். தமிழக முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், 'இலங்கையில் இரண்டு வார காலத்துக்கு உள்ளாக போர் நிறுத்தம் ஏற்படாவிடில், தமிழக் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள்' என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயல்படுத்த ஏன் முனையவில்லை?

போர்நிறுத்தம் செய்ய இலங்கையை நிர்ப்பந்திக்குமாறு மத்திய அரசை அந்த இரண்டு வார காலத்தில் தமிழக முதலமைச்சர் ஏன் வற்புறுத்தவில்லை?

'போர்நிறுத்தம் செய்யுமாறு, இந்திய அரசு எங்களைக் கேட்க வே இல்லை' என்று மஹிந்த ராஜபக்ஷவும், பஸில் ராஜபக்ஷவும் திமிரோடு சொன்னார்களே இது எப்படி?

### பிரச்சினையைத் திசை திருப்ப முயல்கிறது மத்திய அரசு

அவர்கள் நடத்தும் போருக்கு இந்திய அரசு முழுக்க முழுக்க ஆதரவாக இருப்பதால்தானே,

'கடந்த நான்கு ஆண்டுகளில் ஈழத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கும், அவர்கள் சிந்திய ஒவ்வொரு சொட்டு இரத்தத்துக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பொறுப்பு ஏற்க வேண்டும்' என்று கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக நான் குற்றம் சாட்டிவருகிறேன்.

'தமிழினத்துக்கு இந்திய அரசு செய்து உள்ள துரோகத்தை எதிர்த்து, தமிழக மக்களின் உள்ளம் கொந்தளிக்கும் கடல் ஆகும். குமுறும் எரிமலையாக மாறும்' என்ற அச்சத்தாலேயே, ஒருபக்கத்தில் போர்நிறுத்தம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்காமல், அதற்கு உரிய அரசியல் அழுத்தத்தைத் தமிழக முதலமைச்சரும் ஏற்படுத்தாமலேயே பிரச்சினையைத் திசை திருப்புகின்ற வகையில், மிகத் தந்திரமாக சில நடவடிக்கைகளைக் கையாள்கின்றது.

### ஈழத்தமிழர்களை நிரந்தர அடிமையாக்கும் திட்டத்துக்கு இந்திய அரசும் உடந்தை

ஈழத்தமிழர்களின் ஒரே பாதுகாப்புக் கவசம் விடுதலைப் புலிகள்தான். அவர்களை அழித்துவிட்டால் பின்னர் தமிழீழ மக்களை நிரந்தரமாக அடிமை இருளில் தள்ளிவிடலாம் என்பதுதான், சிங்கள அரசின் நயவஞ்சக திட்டம் ஆகும். இந்தத் திட்டத்துக்கு இந்திய அரசும் உடந்தை ஆகும்.

ஒரு காலத்தில் வல்லரசுகளையே எச்சரிக்கின்ற தகுதியும், மரியாதையும் பெற்று இருந்த பண்டித நேருவின் காலம் எங்கே? இந்திரா காந்தி அம்மையாரின் காலம் எங்கே? அடல் பிகாரி வாஜ்பாயின் காலம் எங்கே?

எட்டு கோடித் தமிழர்கள் மூச்சுவிட்டாலேயே பதர் போலக் காற்றில் பறக்கும் சிங்கள இனவெறி அரசின் தலைவர், டெல்லிக்கு வந்து திமிர்வாதம் பேசிவிட்டுப் போனது, சுதந்திர இந்திய வரலாற்றிலேயே நடக்காத களங்கம் மிக்க அவமானம் ஆகும். தமிழர் குலத்துக்கு மட்டும் அல்ல இந்திய மக்களுக்கும், இந்திய அரசு மன்னிக்க முடியாத துரோகத்தைச் செய்து உள்ளது.

### ஈழத்தமிழர்களின் வலுத்தான் இந்தியாவுக்குப் பாதுகாப்பு அரண்

சீன யுத்தத்தின் போதும், பாகிஸ்தான் போரின் போதும், இந்திய ாவுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்ட சிங்கள அரசு இனி எதிர்காலத்திலும் இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களுக்கு எதிராகவே செயற்படும். இந்தியாவின் தென்முனையில், ஈழத் தமிழர்களின் வலுதான், இந்தியாவுக்கே பாதுகாப்பு அரண் ஆகும்.

அருணாசலப் பிரதேசம் எங்களுக்கே சொந்தம் என்று அநியாயமாக உரிமை கொண்டாடும் சீனா ஒரு பக்கம், எந்த நேரத்திலும் இந்தியாவுக்குத் தீங்கு விளைவிக்கத் துடிக்கும் பாகிஸ்தான் ஒருபக்கம் இந்நிலையில் இந்துமா கடலிலும், தென்முனையில் இந்தியாவின் எதிர்கால நலன்களுக்குக் கேடு செய்யும் சிங்கள அரசுக்கு ஆயுதத்தைத் தீட்டி க்கொடுக்கும் முட்டாள்தனமும், அநியாயமும் நிறைந்த நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டு உள்ளது.

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படுத்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததோடு, அந்த இனக்கொலை யுத்தத்தைப் பின்னிருந்து இயக்கும் இந்திய அரசை, அதன் துரோகத்தை தமிழக மக்களும், இந்திய மக்களும் கடுமையாக எதிர்த்துக் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

அந்தக் கோபாவேச எழுச்சியைக் கண்டதற்குப்பிறகாவது, இந்திய அரசு தன் துரோகச் செயலை நிறுத்திக் கொண்டு இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்யும் நிர்பந்தத்தை ஏற்படுத்த முன்வரட்டும் -தெரிவிக்கப்பட்டுள்ளது

(அ-சி)

# அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கும் பட்ஜெட் விவாதம் இன்று ஆரம்பம்

கொழும்பு, நவ. 17

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு (அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு) மீதான குழு நிலை விவாதம் இன்று காலை நாடாளுமன்றில் ஆரம்பமாகிறது.

இன்று காலை தொடங்கும் இந்த விவாதம் அடுத்த மாதம் எட்டாம் திகதிவரை 16 நாள்களுக்கு இடம்பெறும்.

எட்டாம் திகதி மாலை வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

இந்த மாதம் ஆறாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஏழாம் திகதிமுதல் 15ஆம் திகதிவரை நடைபெற்றது.

15 ஆம் திகதி இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 42 மேலதிக வாக்குகளால் இரண்டாம் வாசிப்பு நிறைவேறியது.

ஆதரவாக 127 வாக்குகளும் எதிராக 85 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசுடன் இணைந்து ஜாதிக ஹெல உறுமய, இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ் த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன.

(அ-சி)

# பொதுத் தேர்தலுக்கு தயாராகிறது அரசு?

கொழும்பு, நவ. 17

அரசு தனது கூட்டணிக் கட்சிகளுடன் இடைக்கால பொதுத்தேர்தல் ஒன்றுக்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றது என்றும், வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பிற்குப் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்னியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு இந்தியா கொடுத்துவரும் அழுத்தத்தை எதிர்கொள்வதற்காகவும் நாடு முழுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதைத் தடுப்பதற்காகவும் பொதுத் தேர்தலை நடத்துவது அவசியம் என்று அரசுத் தரப்பில் கருதப்படுவதாகவும் தெரிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கடந்த வார இந்திய விஜயத்தின்போது இந்தியத் தலைவர்களுக்கும் பொதுத் தேர்தலுக்கான சாத்தியம் உள்ளதாகச் சுட்டிக்காட்டினார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குழுவொன்று கடந்த வாரம் தனது கூட்டணிக் கட்சிகளுடன் தேர்தலுக்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்துள்ளது. தேர்தலுக்காக பரந்துபட்ட கூட்டணியொன்றை ஏற்படுத்துவது பற்றியும் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் நடைபெற்றால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணியிலேயே போட்டியிட வேண்டுமென பஸில் ராஜபக்ஷ இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானிடம் வலியுறுத்தினார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(அ-சி)

# மூதூர், மொறட்டுவ பகுதிகளில் கடலரிப்பு; மக்கள் இடம்பெயர்வு

கொழும்பு, நவ. 17

திருகோணமலை, மூதூர் மற்றும் மொறட்டுவ அங்குலானைப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கடல் அரிப்பினால் சுமார் 125 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

திருகோணமலை மூதூர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கடல் அலைகளின் சீற்றத்தினால் 80 மீனவக்குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இடம்பெயர்ந்த குடும்பங்கள் பள்ளிவாசல்களிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளன.

இதேவேளை, அங்குலானை பொலிஸ் நிலையம் முதல் அங்குலானை தேவாலயம் வரை உள்ள கரையோரப் பகுதியும் கடல் அரிப்பின் பாதிப்பிற்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடல் அரிப்பினால் அப்பகுதியில் இருந்து 28 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாகப் பொது இடங்களில் வசித்து வருகின்றன என்றும் கூறப்பட்டது.

எனினும் இவ்விரு இடங்களிலும் ஏற்பட்ட கடல் அரிப்பினால் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

# தீவகப் பாடசாலை ஒவ்வொன்றிலும் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள்

ஊர்காவற்றுறை, நவ. 17

தீவக கல்வி வலயத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக பாடசாலை தோறும் ஆசிரியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு கேட்ட ரீதியாக அவர்களுக்கு, அனர்த்த நிலையான அவசரகால கல்வி தொடர்பாக மூன்று நாள் செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் அனைத்து முகாமைத்துவ குழுக்களை அமைத்து அவற்றின் இணைப்பாளராகப் பணிபுரிவர்.

அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் ஒவ்வொன்றும் முன்னெச்சரிக்கை செய்யும் அணி, முதலுதவி அணி, துரிதமாக நகர்த்தும் அணி, இடத்தைத் தெரிவுசெய்யும் அணி, ஆற்றுப்படுத்தும் அணி ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்

இதன் மூலம் எதிர்பாராத முறையில் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றவும், உளப்பாதிப்புக்களில் இருந்து விடுபட ஆதரவைப் பெறவும், சிறார்கள் எதிர்நோக்கும் அச்ச நிலையில் இருந்து பாதுகாப்பைப் பெறவும் உதவிகள் வழங்கப்படும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட சுனாமி வெள்ளப்பெருக்கு, யுத்தம் போன்ற அனர்த்தங்களினால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இன்றி உயிர் உடைமை இழப்புக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் நடவடிக்கை நம்பத் தகுந்ததாக இல்லை

## ஏமாற்றப் பார்க்கிறார் என்கிறார் கருணாநிதி

சென்னை, நவ. 17

''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கை நம்பத் தகுந்ததாக இல்லை. காரணம், தீவிரவாதம் மற்றும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக சொல்லிக்கொண்டு புலிகளை அடக்குவோம் என்ற பெயரில் இலங்கைத் தமிழர்களுக்கு சொல்லொணாத் துன்பத்தை அவர் அளித்து வருகின்றமை திருப்திகரமான செயல் அல்ல.'' - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி.

கோவையில் நடைபெறும் தி.மு.க. மண்டல மாநாட்டில் கலந்துகொள்வதற்காக முதல்வர் கருணாநிதி நேற்றுக்காலை 8 மணியளவில் தனி விமானத்தில் கோவைக்குச் சென்றார்.

அங்கு தாம் தங்கியுள்ள ஹோட்டலில் வைத்துச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமரையும் சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசியுள்ளேன். மேலும் தி.மு.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களான டி.ஆர்.பாலு, ஆ. ராசா ஆகியோர் மூலம் இலங்கையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று தினமும் கேட்டுஅறிந்துவருகிறேன். மேலும் இப்பிரச்சினை தொடர்பாக தி.மு.க. செயற்குழுக் கூட்டத்திலும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் நம்பத்தகுந்தவையாகவில்லை. அவர் ஏமாற்றப் பார்க்கிறார் - என்றார் கருணாநிதி. (சி)

# மிருசுவில் பிரதேச குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகள் கிடைத்துள்ளன

## வந்து சேகரிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.17

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டக் குடியிருப்பாளர்களில் மேலும் 12 பேருக்குரிய காணி உறுதிகள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.

சம்பந்தப்பட்டோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்பப் பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் நவம்பர் மாத இறுதிக்குள் பிரதேச செயலக காணிகள் பிரிவில் உறுதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் சி.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

உறுதிகள் கிடைத்துள்ளோரின் விவரம் வருமாறு.

மயில்வாகனம் கனகாம்பிகை, அந்தோனிப்பிள்ளை யேசுதாசன், நடராசமூர்த்தி புஸ்பராணி, பொன்னுத்துரை தங்கரத்தினம், செல்லையா அருந்ததிதேவி, சின்னையா கோமளேஸ்வரி, அழகுராசா சிறேஸ் அந்தோனியார், யோகரத்தினம் மார்க்கண்டு, ஸ்ரீஸ்கந்தராசா மனோகரி, ஜீவானந்தம் மடோனா, பாலசுப்பிரமணியம் பாக்கியம், இராசரத்தினம் கௌரி.

ஏற்கனவே இப்பகுதியில் குடியிப்பாளர்களில் 12 பேருக்கு காணி உறுதிகள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# பொலிஸ் களஞ்சியப் பொருள்கள் ஏல விற்பனையில்

யாழ்ப்பாணம், நவ.17

காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களின் களஞ்சியத்தில் உள்ள பல பொருள்களும், உபகரணங்களும் இம்மாதம் 30 ஆம் திகதி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்களை ஏலத்தில் வாங்க விருப்புவோர் இம்மாதம் 29 ஆம் திகதி தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை சந்தித்து அனுமதி பெற்றுப் பொருள்களைப் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏலவிற்பனை சம்பந்தமாக பொலிஸ் அதிகாரியைச் சந்திப்போர் அடையாள அட்டை போன்ற தக்க சான்றாதாரங்களுடன் செல்ல வேண்டும். (அ)

# பண்டித பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், நவ. 17

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியினரால் நடத்தப்பட்ட பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைகளில் சித்தியடைந்தோரின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சித்தியடைந்தோரின் விவரம் பின்வருமாறு

**பண்டிதர் பரீட்சை**

செல்வி இ.சியாமினி(அச்சுவேலி தெற்கு, (முதலாம் பிரிவு), எஸ்.தங்கமயில் (நெல்லியடி)

**பாலபண்டித பரீட்சை**

திருமதி ச.கவிதா(திருநெல்வேலி- முதலாம் பிரிவு), செல்வி க.விமலா (இள வாலை- இரண்டாம் பிரிவு), மா.கணகநாதன்(அராலி வடக்கு), ப.தமிழ்மாறன் (அரியாலை - நூனசித்தி), செ.விஜயகுமார் (நூனசித்தி).

## ஈழத்தமிழர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்று தமிழகத்தின் பல பாகங்களிலும் விஜய் ரசிகர்கள், விஜய் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இயக்குநர்கள் எஸ.ஏ.சந்திரசேகரர், பேரரசு, செல்வபாரதி, நடிகர் மன்சூர் அலிகான் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (அ-சி)

இதில் தமிழக அரசியல் தலைவர்கள் சிலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(க-03)

# மரண அறிவித்தல்

## செல்வராஜா சதீஸ்

(சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், வலி.தென் மேற்கு பிரதேச சபை, சண்டிலிப்பாய். J/133 ஆனைக்கோட்டை)



புலவர் வீதி, நவாலி வடக்கைச் சேர்ந்த செல்வராஜா சதீஸ் நேற்று (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்வராஜா(கிராம அலுவலர்) - காலஞ்சென்ற திருமதி செல்வராஜா செல்வராணி தம்பதியினரின் இளைய மகனும் ஞானமாலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஹேமலதா(G.S.), ரமேஸ் (உள்ளூராட்சி உதவியாளர், பிரதேசசபை, வேலணை), சுரேஸ் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் சகோதரரும் சுதா (ஆசிரியை, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), மகாதேவி(D.P.D.H.S.,யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், அஸ்வினி, ஒஷாயினி, ரிஷாந், சிறிமாலன் ஆகியோரின் சிறியதந்தையும் திருமதி கந்தையா அழகரத்தினத்தின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஹேமா இல்லம்,*
*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு.*

தகவல்:
சுரேஸ், ரமேஸ்.

வெளிவந்து விட்டது!
G.C.E. O/L கணிதம்
மாதிரி வினாத்தாள்கள்
1 2 3
ஆசிரியர்:-
S.சுதாகர்
அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,

# மோதரையில் கைதான இளைஞர்கள் ஒரு மாதத்திற்கு மேலாகத் தடுத்து வைப்பு!

கொழும்பு, நவ. 17

கொழும்புத்துறைமுகத்தில் பணிபுரியும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 3 தமிழ் இளைஞர்கள் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக மோதரைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, இன்னமும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, காரைதீவில் உள்ள சென்றல் வீதியைச் சேர்ந்த சந்திரமோகன் சஞ்சீவ் (வயது-29), மட்டக்களப்பு, கல்லடியில் உள்ள மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணன் புவிதரன் (வயது-30) மற்றும் அம்பாறை, போர்ட் கொலனியில் உள்ள சென்றல் வீதியைச் சேர்ந்த குடும்பஸ்தரான சபாபதிப்பிள்ளை சுதர்ஷன் (வயது-30) ஆகியோரே கைதுசெய்யப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளனர்.

இவர்கள், கடந்த மாதம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் கொழும்பில் பொலிஸ் பதிவு மேற்கொண்டசமயம் விடுமுறையின் நிமித்தம் தமது சொந்த இடங்களுக்குச் சென்றிருந்தனர். பின்னர் இந்த இளைஞர்கள் கொழும்பு வந்து, தமது பதிவை மோதரைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளச் சென்ற வேளை, அங்கு அவர்கள் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் இந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதற்கான காரணம் அறிவிக்கப்படாமல், கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றமை குறித்து அவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இளைஞர்களின் கைது குறித்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு, பிரதியமைச்சர் ராதாகிருஷ்ணன் மற்றும் மக்கள் கண்காணிப்புக் குழு ஆகிய தரப்பினரிடம் முறையிட்டும் எதுவிதப் பயனும் ஏற்படவில்லை என்றும் அவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது நேற்றுக்காலை 6.45 மணியளவிலும் பிற்பகல் 1.30 மணியளவிலும் இரு தாக்குதல்கள் நடத்தப்பட்டன - என்று விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

முகமால்லையை நோக்கி முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் விமானப்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மரக்கறி வியாபாரியை இலக்குவைத்து இரு கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. 7 பிள்ளைகளின் தந்தையான தில்லைநாதன் ஆரோக்கிய நாதன் (வயது - 47) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவர்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளை விட்டு வெளியேறிய நிலையிலேயே புதியகாவலரண்கள் அங்கு அமைக்கப்படுகின்றன.

இதேவேளை, மன்னார் தலை மன்னார் பிரதான வீதியில் அமைந்திருந்த சிங்களப் பாடசாலை தற்போது படையினரின் சோதனைச் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது .

தலைமன்னார் பாதையூடாக மன்னார் நகருக்குள் வரும் அனைத்து வாகனங்களும் இந்த சோதனைச்நிலயத்தில் கடுமையாக சோதனையிடப்படுகின்றது. இதேவேளை மாலை 5.30 மணியில் இருந்து மன்னார் பகுதி முழுவதிலும் இராணுவத்தினர் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாலை 6.30 மணியுடன் மக்கள் நடமாட்டம் இன்றி மன்னார் நகரம் வெறிச்சோடிக் காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. (அ-சி)

## கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் இப்படித் தெரிவித்திருந்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஏ-32 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையை ஓரிரு மாதங்களிற்குள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே நாம் கூறியிருக்கிறோம்.

இது தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த சகோதரர்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை அளிக்கும் அன்பளிப்பும், கௌரவமுமாகும்.

அத்துடன், கோட்டை ரயில் நிலையத்திலிருந்து யாழ் தேவி மூலம் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை. இதற்கான சாத்தக நிலை ஒருவருடத்திற்குள் உருவாகும். என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை - என்றார். (சி)

# தலையாளியில் வழிப்பறி

யாழ்ப்பாணம், நவ. 17

வீதியில் சென்ற வயோதிபப் பெண்ணிடம் இருந்து சுமார் நற்பதாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் அறுத்துச் சென்றுள்ளார்.

கொக்குவில் கிழக்கு, தலையாளியில் இந்த வழிப்பறி நேற்று நண்பகல் இடம் பெற்றது. நண்பகல் வேளை தனியாக நடந்து வந்த கொண்டிருந்த வயோதிபப் பெண்ணிடம் கதைகேட்டுக் கொண்டே இளைஞர் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடினார். (அ-86)

## நிலங்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் திட்டம் என்று அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆனால், திடீரென அந்தத் திட்டத்தை மாற்றி பூநகரியை நோக்கி படைகள் நகர்த்தப்பட்டுள்ளன.

இது அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்பவே செய்யப்பட்டுள்ளது. இந்த அரசியல் தலையீட்டை நாம் எதிர்க்கின்றோம்.

வெறும் நிலங்களை பிடிப்பதால் மாத்திரம் யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்று அரசு நினைக்கக்கூடாது. தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்வதன் மூலம் தான் உண்மையான வெற்றியை அடைய முடியும்.

அப்படியாயின், தமிழ் மக்களுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வை அரசு எடன் முன் வைக்கவேண்டும்.

அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதாக மஹிந்த ராஜபக்ஷ கூறிக்கொண்டே இருக்கிறார். ஆனால், அத்தீர்வை முன்வைக்க எந்தவிதமான நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை.

தீர்வை முன்வைப்பதற்கும், அத்தீர்வு பற்றி விளக்கி கூறுவதற்கும் அரசு பயப்படுகிறது. அச்சத்தைவிட்டு தீர்வை உடன் கொண்டு வருமாறு நாம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் என்றார்.

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணையுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக வன்னி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் குறித்து இலங்கை அரசின் அத்தியாவசியச் சேவைகளின் ஆணையாளர் திவாரட்ண நேற்று இரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்தவை வருமாறு:-

''1,700 மெற்றிக் தொன் நிவாரணப் பொருட்கள் அடங்கிய கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் எமக்குத் தெரியப்படுத்தின.

நாளை (அதாவது இன்று) கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள், இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் நாம் இதுகுறித்து ஆலோசனை நடத்துவோம்.

இந்த ஆலோசனைக் கூட்டதில், எவ்வாறு இந்த நிவாரணப் பொருள்கள் வன்னிக்கு விநியோகிக்கப்படும் என்பது குறித்துக் கலந்துரையாடப்படும். செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரின் கிடங்கில் நாங்கள் பொருள்களை இறக்கத் திட்டமிட்டிருக்கிறோம். அங்கிருந்து லொறிகள் மூலம் நிவாரணப் பொருள்கள் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குஅனுப்பப்படும்.

இந்த விநியோகம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் இடம்பெறும் - என்றார். (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org